விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து *Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 10 வெள்ளிக்கிழமை (24.05.2002) தொலைபேசி 3378 ஒலி 156

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளுக்கு
நியூ நகுலா ஜு வல்லறி
74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.





வடமராட்சி கல்விச் சமூகத்தினர் பாடசாலைகளில் இருந்து படையினரை வெளியேறக் கோரி நேற்று நடத்திய எதிர்ப்பு போராட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்

## புலிகளின் தடையை நீக்குவதில் கருத்து வேறுபாடு

# அரசு புலிகள் பேச்சுவார்த்தை மேலும் காலதாமதமாகும்!

### வெளிவிவகார அமைச்சர் தாய்லாந்தில் பேட்டி

(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் யூன் மாத இறுதியில் நடைபெறவிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேலும் காலதாமதமாகலாம் என்று வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ "பாங்கொக் போஸ்த்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாகவும் விடுதலைப்புலிகளுடனான சமாதா

கொங் போஸ்த் பத்திரிகைக்கு பேட்டி ஒன்று அளித்திருந்தார்.

அப்பேட்டியிலேயே அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான தாய்லாந்து பேச்சுவார்த்தை

ன்டோ அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலாக்கம்

## அமைச்சர் ஆறுமுகம் நேற்று யாழ் வந்தார்

(யாழ்ப்பாணம்)

வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்புதுறை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

ஏ-9 தரைப்பாதையூடாக யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

யாழ் நகரப் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர் பிற்பகல் 2 மணியளவில் யாழ் செயலகத்தில் இடம்பெற்ற உயர்மட்ட மாநா

## "பாங்கொக் போஸ்த்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக் குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாகவும் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவாரத்தை தொடர்பாகவும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ பாங்கொங் போஸ்த் பத்திரிகைக்கு பேட்டி ஒன்று அளித்திருந்தார்.

அப்பேட்டியிலேயே அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான தாய்லாந்து பேச்சுவார்த்தை காலதாமதமாகலாம் என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலாக்கம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்களினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. (0[illegible]ம் பக்கம் பார்க்க)

வடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்புதுறை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

இரு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு அமைச்சர் ஏ-9 தரைப்பாதையூடாக யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

யாழ் நகரப் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர் பிற்பகல் 2 மணியளவில் யாழ் செயலகத்தில் இடம்பெற்ற உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொண்டார். (0[illegible]ம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்கு முன்னதாக புலிகள் தடையை நீக்கவேண்டும்

## நோர்வே அமைச்சரிடம் பாலசிங்கம் மீண்டும் வலியுறுத்து

(லண்டன்)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்பதாக தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் தூதுக் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான நோர்வேயின் தூதுக் குழுவினரை அன்ரன் பாலசிங்கம் நேற்று சந்தித்திருந்தார்.

இச் சந்திப்பின் போது அரசியல் (0[illegible]ம் பக்கம் பார்க்க)

# வடமராட்சியில் நேற்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(வடமராட்சி நிருபர் சந்திரமோகன்)

பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறாததைக் கண்டித்து நேற்று வடமராட்சியில் மாணவர் சமூகம் மாபெரும் அடையாள எதிர்ப்பு போராட்டத்தை நடத்தியது.

மாணவர்களின் கல்விச் செயற்பாடு சுதந்திரமானதாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி மாணவர்கள் அடையாளப் பகிஷ்கரிப்பு மற்றும ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் 9 மணியளவில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மற்றும் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை ஆகியவற்றுக்குச் செல்லும் நுழைவாயிலில் அமைந்துள்ள இராணுவச் சோதனைச் சாவடி முன்பாக மாணவர்கள் ஒன்று திரண்டு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். (02ம் பக்கம் பார்க்க)

*பிரபாவைக் கைது செய்யும்*

# சட்ட சபைத் தீர்மானம் சமாதானத்தை குழப்பும்

(புதுடில்லி)

தழிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைது செய்து கொண்டு வரவேண்டுமென தமிழக சட்டசபை நிறைவேற்றியுள்ள தீர்மானம் இலங்கையின் சமாதான முயற்சிகளில் பின்னடைவை ஏற்படுத்துமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்னை சென்றுள்ள அவர் அங்கு நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து கூறுகையில்:-(02ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ரணில் நாளை லண்டன் பயணம் பிளேயருடன் பேச்சு நடத்துவார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை சனிக்கிழமை பிரிட்டன் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பிரிட்டனுக்குச் செல்லும் பிரதமர் ரணில் அந்நாட்டுப்பிரதமர் ரொனிபி ளேயருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இப் பேச்சுக்களின்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் குறித்து ஆராயப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரிட்டனுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு பெல்ஜியம் செல்லும் பிரதமர் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர், ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர ஆகியோருடன் பேச்சு நடத்தவுள்ளதுடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சாமாதானத்தை ஏற்படுத்துவதில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொறுப்புக்கள் என்ற தொனிப்பொருளில் ஐரோப்பிய பாராளுமன்ற அபிவிருத்திக் குழுவில் பிரதமர் உரை நிகழ்த்துவார்.(த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு பனை அபிவிருத்திச் சபை

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### செயலாளர்

**கல்வித் தகைமைகள்:**

பட்டதாரியாக இருப்பதுடன் அரச திணைக்களம் அல்லது ஏதாவதொரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மூன்று வருட காலம் குறிப்பிட்ட பதவியில் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது

பட்டயச் செயலாளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றவராகவும் கோரப்படும் பதவியில் ஐந்து வருட கால அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

### கணக்காளர்

**கல்வித் தகைமைகள்:**

ACA, CIMA. அல்லது ACCA அத்துடன் கணக்காளராக அல்லது உதவிக் கணக்காளராக அரச நிறுவனத்தில் அல்லது ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 5 வருட அனுபவம்.

அல்லது

ACA அல்லது C.I.M.A அல்லது A C.C.A இடைநிலைத் தேர்ச்சி சான்றிதழுடன், அரசதுறை அல்லது ஏதாவதொரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்காளர் சேவையில் பத்து வருடகால அனுபவம்.

அல்லது

வர்த்தகப் பட்டதாரியாக இருப்பதுடன் கணக்காளர் பதவியில் பத்து வருடகால அனுபவம்.

அல்லது

பனை அபிவிருத்திச் சபையில் நிதி உதவியாளராக 15 வருடகால அனுபவம்.

**சம்பளதிட்டம்:**

ரூபா 86,700.00 — 15 x 2700 — 127200

(அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்)

**வயதெல்லை:**

45 வயதுக்கு உட்பட்டவராக இருக்கவேண்டும். அரசாங்க சேவை அல்லது கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுபவர்களுக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

தெரிவு செய்யப்படுபவர் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைக்காரியாலயத்திலும், கொழும்பு நகர அலுவலகத்திலும் கடமையாற்றுமாறு கோரப்படுகின்றனர்

பூரண சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் உறவினரல்லாத இரு நடுவர்களின் பெயர்களுடன் கல்விச்சான்றிதழ், தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்பட்டு பதிவுத்தபாலில் 10.06.2002ம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர், பனை அபிவிருத்திச் சபை, 244, காலி வீதி, கொழும்பு-4 அல்லது தலைவர், பனை அபிவிருத்திச்சபை, 53 கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அரச திணைக்களம், கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் திணைக்களம் கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கு ஊடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

**பொ சிவபாதம்**
தலைவர்
பனை அபிவிருத்திச்சபை
(கி-4286)

---

# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு இராசமலர்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கே. கே. எஸ். வீதி, மருதனார்மடததை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இராசமலர் நேற்று (23.05.2002) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை பூரணம் தம்பதிகளின் மகளும், மார்க்கண்டு (கட்டட ஒப்பந்தகாரர்) அன்பு மனைவியும், அன்புதாஸ் (நீர் வழங்கல் பிரிவு முகாமைத்துவ ஆராய்ச்சி அலுவலர் கொழும்பு), அன்புசிலோஜினி (ஆசிரியர் யூனியன் கல்லூரி), அன்புசுபோஜினி (ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), அன்பரசி (திறந்த பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மசேஸ்வரி, நல்லையா, சிவராசா (கிளிநொச்சி கச்சேரி) சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**இ. மார்க்கண்டு**
(கணவர்
கே. கே. எஸ். வீதி,
மருதனார்மடம்.
(கி-4292)

---

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் இருந்து 200 யார் தூரத்தில் போக்குவரத்து வசதியும் மின்சாரம், கனிக்கிணறு, மலசலகூடம் போன்ற வசதியும் கூடிய $1\frac{1}{2}$ பரப்புக்காணி 4 அறை கோலுக்குரிய அத்திவாரத்துடன் கல்விபங்காட்டில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: க. அம்பிகைபாகர் 38 சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி தெற்கு திருநெல்வேலி.

(5340)

### வியாழ மாற்றம்

30–06-2002ல் வியாழ மாற்றப் பலாபலன் நூல் வெளிவந்துவிட்டது எங்கும் கிடைக்கும். ஆக்கம் சோதிட ஞானி சண்-மாஸ்ரர் ரூபா 15/- 10-A முதலாம் ஒழுங்கை பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

(5336)

---

**பிரபாவை**

கடந்த காலங்களில்இடம் பெற்ற சம்பவங்களை மறந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்களிப்பு வழங்க இந்தியா முன்வந்தால் இலங்கை அதனைவரவேற்கும் என்றும் அவர்கூறியுள்ளார்.

இதேவேளை தூத்துக்குடி துறைமுகத்துக்கும் கொழும்பு துறைமுகத்துக்கு மிடையில் கப்பல்சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஹக்கீம் அங்கு எடுத்துக்கூறினார். (த)

---

# இராசி பலன்

24.5 2002
(வைகாசி 10, வெள்ளி)
திரயோதசி மு.இ 9.52 வரை
சித்திரை காலை 6.58 வரை
சுவாதி வை 5.37 வரை
ராகுகாலம் 10.22- 11.52
நல்லநேரம் -5.52-7.22
பிரதோச விரதம்

**மேடம்**
அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், சுவாரஸ்யம், தொழில் நன்மை.

**இடபம்**
சந்தோஷமான சம்பவம், உடல்நலம், பிறர் உதவி, காரிய நன்மை.

**மிதுனம்**
வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், போசன சுகம், சயன சுகக்குறைவு.

**கடகம்**
அன்னியர் உறவு, பபந்த சுபாவம், முயற்சி தாமதம், பிரயாணம்.

**சிங்கம்**
தனவரவு, குடும்ப மகிழ்ச்சி, திட்டங்கள் நிறைவேறும், வாக்கு மேன்மை.

**கன்னி**
அபகீர்த்தி காரியச்செலவு, நிலைமாற்றம், மாதர் நட்பு.

**துலாம்**
நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, புதியபொருள்சேர்க்கை, உறவினர் வருகை.

**விருச்சிகம்**
அமைதிக்குறைவு, சயன சுகக்குறைவு, காரியதாமதம். பிதாசிந்தை.

**தனுசு**
காரியநன்மை, பொருள் சேர்க்கை, தொழில் சிறப்பு, தெய்வதரிசனம்.

**மகரம்**
அதிகபிரயாசை, சுபநிகழ்வு, முயற்சிகைகூடும், பிறர்உதவி.

**கும்பம்**
பிரயாணம், உடல்நலக் குறைவு, காரியதாமதம், புதிய திட்டமிடல்.

**மீனம்**
உடல்வியாதி, வீண்தொல்லை, காரியதடங்கல் நண்பர்கள் விரோதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

---

**வடமராட்சிப்**

இப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் வடமராட்சி பாடசாலை மாணவர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

முற்பகல் 11 மணிவரை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமாணவர்கள் பின்னர் அங்கிருந்து பேரணியாக புறப்பட்டு பருத்தித்துறையில் அமைந்துள்ள 524வது பிரிகேட்டிற்கு சென்றனர்

கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது பேரணியாகவந்த மாணவர்கள் இராணுவமுகாம் முன்பாகஅமர்ந்திருந்து எதிர்ப்புக்கோஷம் எழுப்பினர்.

பேரணி முடிவில் நண்பகல் 12·45மணியளவில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றும்இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்பல்கலைக்கழக மாணவர்ஒன்றியத்தலைவர் எஸ்.பரணிதரன் மற்றும்பாடசாலை மாணவர் ஒன்றியத்தலைவர்கள் எனபலர் உரையாற்றினர்

அத்துடன் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் யாழ்மாவட்டக் கண்காணிப்புக்குழு ஆகியவற்றுக்கு மகஜர்களும் அனுப்பப்பட்டன (இ)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## செய்முறைப் பரீட்சை (சங்கீதம் நாட்டியம்)

1- நுண்கலைமாணி 1ம், 2ம், 3ம், 4ம் வருடத்தேர்வு - 1999
2. கலை முதற் தேர்வு - 2000
3. பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி I - 2000
4. பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி II - 2000

மேற்படி கற்கை நெறிகளில் சங்கீத, நாட்டிய அலகுகளுக்கான செய்முறைப் பரீட்சைகள் 27, 28, 29. 06. 2002 ஆகிய திகதிகளில் மருதனார் மடத்திலுள்ள இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் 9.30 மணிக்கு நடைபெறும்.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சை அனுமதி அட்டையுடன் சமுகமளிக்கவும்.

செய்முறைப் பரீட்சைகள் முடிந்ததும் மாணவர்கள் தங்கள் அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பரீட்சை அலகில் ஒப்படைக்கவும்.

பதிவாளர்
22. 05 2002
(கி-4289)

---

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி நடனமூர்த்தி

மண்டைதீவு 7ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கலாசாலை வீதி 1ம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நடனமூர்த்தி நேற்று (23.05.2002) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், சந்திரன் (லண்டன்) சவுந்தலா (ஜேர்மனி), மஞ்சுளா, சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமணிதேவி, ஜெகஸ்வரன் (ஜேர்மனி) பழனி ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலசிங்கம் (கனடா) மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆனந்தம், பாக்கியலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று நண்பகல் 12 மணியளவில் திருநெல்வேலி செம்பாடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**கனகாம்பிகை**
மனைவி
(5348)

## சின்னையா சுப்பிரமணியம்

கொக்குவில் மேற்கு சிவகுரு வீதியைச் சேர்ந்த சின்னையா சுப்பிரமணியம் 22-05-2002 புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவராவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-05-2002 வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சு. பரமேஸ்வரன்
(மகன்)
(ஆசிரியர் யாழ். புங்குடுதீவு, மகாவித்தியாலயம்.)
சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
(சி 4293)

# நாடுகள் ஒன்றிற்கொன்று உதவும் நோக்குடன் உருவாக்கப்பட்ட 'பொதுநலவாயம்' அமைப்பு

**த. சிவகுமார்**
(இன்று பொதுநலவாய அமைப்பு தினம்)

மிகப் பழைய காலத்திலிருந்தே நாடுகளுக்கிடையே பல்வேறு தொடர்புகள் இருந்து வந்துள்ளன. அவை பெரும்பாலும் வியாபாரம் அல்லது கலாசாரத்தை மையமாக கொண்டே அமைந்திருந்தன. எனினும்இருபதாம்நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அமைக்கப்பட்ட பல்வேறு சர்வதேச அமைப்புக்கள பரந்த திட்டங்களோடு ஆரம்பிக்கப்பட்டவையாக காணப்படுகின்றன.

அந்த அமைப்புக்கள் அரசியல், பொருளாதார, வர்த்தகம், கலாசாரம் என்ற வகையில் ஒன்றுக்கொன்று உதவி புரியும் நோக்கோடு அமைக்கப்பட்டன. அந்த வகையில் ஐக்கிய நாடுகள் சபை முன்னணி வகிக்கின்றது.

இலங்கை

1955ல் இலங்கையும் இவ்வமைப்பில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டது. பின்னர்பொது நலவாயஅமைப்பு, கொழும்புத்திட்டம், சார்க் அமைப்பு முதலிய அமைப்புக்களில் அங்கத்துவத்தை இலங்கையும் பற்றுக் கொண்டது. அத்தகைய அமைப்புக்களை ஆரம்பிக்கும் போது உதவியாக இருந்த நாடுகள வரிசையில் இலங்கையும் இருந்ததால் தனியானதொரு கௌரவத்தையும் பெற்றுக் கொண்டது. இந்த அமைப்புக்களில் இயங்கக் கூடிய அங்கத்துவ நாடாக இலங்கை இருந்தமையால் பொதுவாக உலக மக்களுக்கும் இலங்கை மக்களுக்கும் பல்வேறு சேவைகள் கிடைக்கப்பெற்றன.

சூரியன் அஸ்தமிக்காத பரந்த குடியேற்றங்களை உருவாக்கிக் கொண்ட பிரித்தானிய பேரரசுக் கொள்கையை கடைப்பிடித்து வந்தது. இதனால் பெரும்பாலும் ஆசிய ஆபிரிக்க நாடுகள் பாதிப்புக்களுக்கு உள்ளாயின.

பொதுநலவாயம்

இரண்டாம்உலக மகாயுத்தமானது முடிவடைந்த காலப் பகுதியில் பிரித்தானிய சாம்ராச்சியத்திலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் தமது கூட்டுறவை வலுப்படுத்தும் வகையில் பிரித்தானிய பொதுநலவாயம் என்ற பொது அமைப்பானது உருவாக்கப்பட்டது.

காலங்கள் பல கடந்ததன் பின்னர் பிரித்தானிய பொதுநலவாயத்தில் அங்கம் வகிக்கும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் தொகை அதிகரித்ததன் விளைவாக இவ் அமைப்பானது பொதுநலவாயம் என பெயர் சூட்டப்பட்டது.

பொதுநலவாய அமைப்பின் தலைமையகம் லண்டனில் உள்ளது இதன் மகாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். இதற்குத் தலைவியாக பிரித்தானிய மகாராணி விளங்குகின்றார். 1990 ஆம் ஆண்டு 60 நாடுகள் அங்கத்துவ நாடுகளாக இணைந்து கொண்டன.

பொதுநல வாய நாடுகளின் அமைப்பில் கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரித்தானியா, தென் ஆபிரிக்கா போன்ற அபிவிருத்தி அடைந்தநாடுகளும்இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், உகன்டா, கெனியா, சிம்பாவே, போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.

பொதுநலவாய அமைப்பின் குறிக்கோள்கள்

- அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- உலக சமாதானத்தை ஏற்படுத்துதல்
- அங்கத்துவ நாடுகளுக்கிடையில் அரசியல், பொருளாதார கலாசார, துறைகளில் பரஸ்பர நல்லுறவை விருத்தி செய்து கொள்ளல்
- தொழில் நுட்பங்களைப் பரிமாறிக் கொள்ளல்
- புலமைப்பரிசில்களை வழங்கி அறிவுப் பரிமாற்றத்தை ஏற்படுத்தல்
- அங்கத்துவ நாடுகளுக்கிடையில் வர்த்தகத் தொடர்புகளை பேணுதல்,

பொதுநலவாய அமைப்பினால் இலங்கைக்கு கிடைக்கும் உதவிகள்

- நீர் மின் சக்தியைப் பெறுவதற்கான உதவிகள்
- வன, வள அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவிகள்
- கைத் தொழில் விருத்திக்கான தொழில் நுட்ப உதவிகள்
- மாணவர்கள் புலமைப் பரிசில்கள் ஊடாக தொடர்புகளைப் பெருக்கிக் கொள்ளல்
- வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்

பொது நலவாய நாடுகளுககிடையே ஏற்படும் தொடர்புகள்

- வர்த்தகம்
- நிதி
- முதலீடுகள்
- சனத்தொகை இடப்பெயர்வு
- நீதித்துறை
- பொதுக் கல்வி

# யாழ். இலங்கைவங்கி மேற்றரக் கிளையிலும் தன்னியக்க இயந்திரமூலம் பணப்பரிமாற்றம்

**க. பாலசுப்பிரமணியம்**
செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி - வடபிராந்தியம்

வளர்ந்து வரும் வங்கித் துறை பல நவீன இயந்திரங்களையும் கணனிகளையும் அறிமுகப் படுத்தி வருகின்றது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் வங்கித் துறையின் வளர்ச்சி அளப்பரியது. இருபத்து நான்கு மணி நேரமும் வீட்டிலிருந்தபடியே தமது வங்கித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வசதி வாடிக்கையாளருக்கு இப்போது கிடைக்கின்றது.

இலங்கையும் இந்தத் துறையின் நவீன வசதிகளை ஏற்கெனவே நாட்டின் ஏனைய பகுதிகளில் அறிமுகப்படுத்தி வருகின்றது. துர்ரதிர்ஷ்டவசமாகப் பல பிரச்சினைகள் காரணமாக யாழ் குடாநாட்டு வங்கித்துறை ஏறத்தாழ ஐம்பது வருடங்கள் பின்னிற்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனால் சமீபத்தில் நிகழ்வுகளால் யாழ் குடாநாடு மீண்டும் புதுப் பொலிவடைய ஆரம்பித்திருக்கிறது. இதனால் சகலரின் பார்வையும் இப்பக்கம் நோக்கித் திருப்பப்பட்டுள்ளது.

தன்னியக்க இயந்திரம்

எப்பொழுதுமே மக்கள் சேவையை மனதில் கொண்டிருச்கும் இலங்கை வங்கி நவீன வசதியை யாழ்குடாநாட்டில் ஏற்படுத்தவும் வங்கிச் சேவைகளை இலகுவாக்கவும் துரிதமாக்கவும் பல நடவடிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் எடுத்து வருகின்றது.

அதன் ஒருகட்டமாக இன்று 24.05.2002) வெள்ளி முதல் யாழ். மேற்தரக் கிளையில் தன்னியக்கப் பணம் மீளப்பெறும் இயந்திரத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கின்றது. கொழும்பிலிருந்து விசேடமாக வருகை தந்திருக்கும் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளரின் வழி நடத்தலில் துரித கதியில் இவ்வியந்திரம் இயக்கி வைக்கப்படுகின்றது.

செயற்பாடு

தன்னியக்கப் பணம் மீளப் பெறும் இயந்திரம் என்றால் என்ன? அதன்மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய சேவைகள் என்னென்ன என்பதை இனிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

குறிப்பிட்ட ஒரு வங்கிக் கிளையில் (உ+ம் இலங்கை வங்கி) கணக்கு வைத்திருக்கும் ஒருவர் இலங்கையின் எப்பாகத்திலும் இவ்வித இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கும் இலங்கை வங்கிக் கிளையிலுள்ள தமது கணக்கிலிருந்து ரூபா 20,000/- வரையான பணத்தை ஒரு நாளில் 24 மணிநேரமும் பெற்றுக் கொள்ளலாம். அதாவது வெள்ளவத்தை இலங்கை வங்கிக் கிளையில் கணக்கு வைத்திருப்பவர் யாழ். மேற்தரக் கிளையில் பொருத்தப்பட்டிருக்கும் இவ்வியந்திரம் மூலம் 30 விநாடி நேரத்தில் தனது கணக்கிலிருந்து பணம் பெறலாம்.

இதற்காக கணக்கு வைத்திருப்பவர் வங்கியிலிருந்து ஒரு பணம் மீளப்பெறும் அட்டையைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இவ்வட்டையுடன் அவருக்குரிய ஒரு இரகசிய எண்ணும் வழங்கப்படும். இந்த எண்ணை அவர் மாற்ற விரும்பின் இதே இயந்திரம் மூலம் தனக்குரிய இரகசிய எண்ணைப் பதிவு செய்து கொள்ள முடியும். சுருக்கமாகக் கீழ்க் கண்ட வங்கி வசதிகளை இவ்வியந்திரம் மூலம் பெறமுடியும்.

- இவ்வசதியுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் பல கணக்குகளை வைத்திருக்கும் ஒருவர் எவ்வித செலவுமின்றி தனது கணக்குகளுக்கிடையில் பணப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம். உதாரணமாக யாழ் நகரில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் காலியிலுள்ள தனது கணக்குக்கு சில நொடிகளில் பணம் அனுப்ப முடியும் இப்படியான பரிமாற்றத்தை ஒருவரின் 16 கணக்குகளுக்கிடையில் செய்யமுடியும்
- மேற் கூறியபடி இரகசிய எண்ணை விரும்பிய படி மாற்றிக் கொள்ளலாம்.
- பணம் மீளப் பெறுதல் நிலுவையை அறிதல்.
- கடைசி 10 கொடுக்கல் வாங்கல்களின் விபரம் அறிதல்.
- நாளின் 24 மணி நேரமும் சேவையைப் பெறுதல்.
- ஆகக் குறைந்த தொகையாக ரூபா 100/- ம் நூறின் பெருக்கங்களாகரூபா 20000/ வரையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ளல்.
- எந்த விதமான முத்திரைத் தீர்வோ கட்டணமோ வசூலிக்கப்படாமை.
- சேமிப்பு கணக்கிலிருந்து விரும்பினால் தினமும் பணம் மீளப் பெறும்வசதி(தற்போது வாராந்தம் ஒரு முறை தான் சேமிப்பு கணக்குகளிலிருந்து பணம் மீளப் பெறலாம்)

இரகசியத்தன்மைபேணப்படல்

இவை யெல்லாவற்றையும் விட பூரண இரகசியத்தன்மை பேணப்படல்

இவ் வியந்திரம்பொருத்தப் பட்டுள்ள இலங்கை வங்கிக் கிளைகளின் பட்டியல் எமது விளம்பரத்தில் காணப்படுகின்றது. இப் பட்டியலில் உள்ள ஏதாவது ஒரு கிளையில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் மற்றும் ஏதாவது கிளையில் தனது பணம் மீளப் பெறும் அட்டைகளையும் இரகசிய எண்ணையும் பயன் படுத்தி மேற் கூறிய சகல வங்கிச் சேவைகளையும் சில நொடிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

இன்னும் சில வாரங்களில் மேற் கூறிய வலைப்பின்னலில் யாழ் மேற் தரக் கிளையும் இணைந்து கொள்ளும், அதன் பின்னர் இக் கிளையில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் பட்டியலிலுள்ள ஏதாவது கிளையில் இச் சேவைகளை உடனடியாகவும்,இரகசியமாக பெற்றுக் கொள்ளலாம், யாழ். நகரில் ஆரம்பித்து படிப்படியாக குடாநாட்டிலுள்ள சகல கிளைகளும் ஒன்றுடன் ஒன்று கணனி மூலம் இணைக்கப்படும்.

இலங்கை வங்கி என்றும் உங்களுடனும் உங்களுக்காகவும் பணியாற்றும்.

## கட்டாக்காலிகளால் விபத்துகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளால் விபத்துக்கள் அதிகரித்து வருவதாகவும்.

அவற்றைக் கட்டிவளர்த்து வீதிவிபத்துக்களைத் தவிர்க்க ஒத்துழைப்பு வழங்குமாறும் கால் நடைகளின் உரிமையாளர்களை நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் செ.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (உ-19)

## ஆத்மஜோதியின் ஜெயந்தி தினவிழா

(ஏழாலை)

ஆத்மஜோதி நா.முத்தையாவின் 85 ஆவது ஜெயந்தி தின விழாவும்மணிமண்டபத் திறப்பும் நாளை ஏழாலை பாதாள ஞானவைரவர் கோவிலில்நடைபெறவுள்ளது.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்(நந்தி)தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவின் சிறப்புரைகளை சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள், இந்துசமயப் பேரவை செயலாளர் சி. சக்திகிரீவன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம், சைவப்புலவர் அனுசாந்தன் ஆகியோரும், ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் சிவசண்முக வடிவேல், பண்டிதர் பேரின்பநாயகம், கலைப்பீடாதிபதி பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர். இந்து சமய பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பிஆகியோரும் வழங்கவுள்ளனர். (உ-8)

## செவ்வாய் முதல் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

போக்குவரத்து தேசிய கொள்கை தொடர்பாக இன்றுடன் அரசு தீர்மானம் எடுக்காது விட்டால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

பிரயாணிகளிற்கும், பஸ் உரிமையாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் பஸ் கட்டணங்களை உயர்த்துவது போன்ற விடயங்களினை தாம் அரசிடம் இருந்து எதிர்பார்ப்பதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்

எரிபொருள் விலை உயர்விற்கு ஏற்ப ஏனைய பொருள்களின் விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கு தேசியக் கொள்கையொன்று அவசியம் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஞாயிறன்றும் தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தையொட்டி, அன்றையதினம் ஞாயிற்றுக்கிழமையாக உள்ள போதிலும் தபால் விநியோகம் இடம்பெறுமென தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

## கட்டாக்காலிகளால் பயிர்கள் நாசம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் அம்பன், குடத்தனைப் பகுதிகளில் செய்கை செய்யப்பட்டுள்ள சிறுபோகப் பயிர்களை, அங்கு பெருமளவில் கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடு,மாடுகள் சேதப்படுத்தி வருகின்றன. (உ-23)

## 219 தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க நோயாளர் கப்பலில் குடாநாட்டிற்கான, 219 வெளியூர் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

அதே சமயம், இங்கு சேகரிக்கப்பட்ட 33 தபால் பொதிகள் இக்கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், தரைப்பாதை வழியாக குடாநாட்டிற்கான முத்திரை விநியோகம் சீராக இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 10

## பகுதி II

ஆக்கம் – "சாயிகல்வி வட்டம்"
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

**கீழே உள்ள பாடலை வாசித்து 1~11வரையான வினாக்களுக்கு விடை தருக.**

ஏர் பிடித்து வயல் உழுதோம்
அந்தக்காலம்
எந்திரத்தால் வயல் உழுதோம்
இந்தக்காலம்
வண்டி கட்டி சென்று வந்தோம்
அந்தக்காலம்
அண்ட வெளி சென்று வந்தோம்
இந்தக்காலம்
அம்புலியை வா வா என்றோம்
அந்தக்காலம்
அம்புலிக்குச் சென்று வந்தோம்
இந்தக்காலம்

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

(1) கவிஞர் கூறியது
(பழைய காலம் பற்றி, நவீன காலம் பற்றி, பழைய காலத்தைப் பற்றியும் நவீன காலத்தைப் பற்றியும்)
(2) ஏர் என்பது
(கலப்பை, வயல், உழுதல்)
(3) அந்தக் காலம் என்பது
(பழைய காலம், இயந்திரங்கள் வராத காலம், நவீன காலம்)
அந்தக்கால வாழ்க்கை முறைகள் இரண்டு தருக
(4)
(5)
இக் கால நடைமுறைகள் 3 தருக
(6)
(7)
(8)
சரியான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.
(9) வயலை உழுபவன்
(உழவன், கமக்காரன், தோட்டக்காரன்)
(10) வண்டி கட்டல் என்பது
(வண்டி செய்தல், வண்டியில் பிரயாணம் செய்தல், வண்டியின் உடைந்த பகுதியைத் திருத்துதல்)
(11) அண்ட வெளி சென்று வந்தோம் என்பது
(விமானத்தில் பறத்தல், சந்திரனுக்குச் சென்று வந்தமை, செய்மதிகள் அனுப்பியமை)

**விடை தருக**
(12) சந்திர மண்டலத்தில் முதன் முதலில் காலடி வைத்தவர் யார்? ....................
(13) அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? ................................
(14) அவர் சென்ற றொக்கட்டின் பெயர்?................................

இன்ரநெற் மூலம் நாம் பெறும் பயன்கள் அதிகம். தகவல்கள், செய்திகள் போன்றவற்றை ஒரு செக்கனில் உலகின் எப்புகுதியில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம். ஓரிரு செக்கனில் கடிதம் எழுதிப் பதிலையும் பெற்றுக்கொள்ளலாம். இதைவிட உலகிலுள்ள செய்தித்தாள்கள், இலக்கியங்கள், கட்டுரைகள், சினிமாக் கதைகள், சித்திரங்கள், பாடல்கள் உலகிலுள்ள விமான, புகையிரத நிலையங்களிலிருந்தும் விமானங்கள்,புகையிரதங்கள், புறப்படும், வந்தடையும், நேரங்கள் முதலியவற்றை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம்.

இன்ரநெற் மூலம் நாம் பெறும் பயன்கள் மூன்று தருக?
(15)
(!6)
(17)
பின்வருவன சரியாயின் 'S' எனவும் பிழையாயின் 'P' எனவும் அடையாளம் இடுக.
(18) விரைவாகத் தகவல்களைப் பெற தொலைபேசியே எமக்கு உதவி செய்கிறது. □
(19) உலகில் உள்ள பிரபலமான செய்தித் தாள்களை வீட்டிலிருந்து இன்ரநெற் மூலமாகப் படிக்கலாம். □
(20) மாணவர்களின் கல்விக்கு இன்ரநெற் அதிகளவு உதவி புரிகிறது. □
(21) இன்ரநெற் எமது நாட்டில் இல்லை. □
(22) இன்ரநெற் மூலமாக இலங்கைப் பத்திரிகையான வீரகேசரியைப் படிக்கலாம். □

கண்டி ஆரியரட்னா அவெனியுவைச் சேர்ந்த திருமதி பெர்னான்டோ மல்காந்தி என்பவர் இலங்கையிலிருந்து லண்டனுக்கு செல்வதற்காக 21.05.2002 அன்று கட்டுநாயக்கா விமானத் தளத்திலிருந்து எவ் எவ் விமானங்கள் புறப்படுமென அறிய இன்ரநெற்றின் உதவியை நாடினார்.

| விமான இல | புறப்படும் நேரம் | சேரும் இடம் |
|---|---|---|
| UL 805 | 00 : 15 | லண்டன் |
| UL 304 | 02 : 30 | பாங்கொக் |

பாங்கொக்கிலிருந்து 6.30 மணிக்கு U.S 207 இலக்க விமானம் லண்டனுக்குப் புறப்படும். U.L 304 05.30 மணிக்கு பாங்கொக்கை அடையும்.
A.M 258 3.45 மணிக்கு புதுடில்லிக்கு வந்து இரண்டு மணித்தியாலங்கள் தங்கி 09.30 மணிக்கு லண்டனுக்குப் புறப்படும்.
(23) தகவல் கோரியவரின் பெயர்? (முதல் எழுத்துக்களுடன்).......................
(24) அவரது இலங்கை முகவரி?...............................
(25) அவர் செல்ல விரும்பிய இடம்?..........................
(26) அவர் உதவியை நாடிய சாதனம்?........................
(27) எந்த விமானம் கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்டு நேராக லண்டன் செல்லும்?...
(28) அவ் விமானம் சாதாரண நேரம் எத்தனை மணிக்குப் புறப்படும்?..................
(29) U.L 304ம் இலக்க விமானம் பாங்கொக்கை சென்றடைய எவ்வளவு நேரம் எடுக்கும்?.................
(30) U.L 304 இலக்க விமானம் பாங்கொக்கை அடைந்து எவ்வளவு நேரத்தின் பின்னர் U.S 207 விமானம் புறப்படும்?..........................
(31) கட்டுநாயக்காவிலிருந்து இலண்டனுக்கு ஒரு வழிக்கட்டணமாக 325 அமெரிக்க டொலர் செலுத்த வேண்டும். அமெரிக்க டொலர் ஒன்றின் இலங்கைப் பெறுமானம் 89 ரூபாவானால் அவரது பயணச் செலவு இலங்கைப்பணத்தில் எவ்வளவு?.................................

**சுருக்க விடை தருக**
(32) தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?................
(33) விமானத்தைக் கண்டுபிடித்தவர் யார்?.................
(34) மினசாரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?....................
(35) புவியீர்ப்பைக் கண்டுபிடித்தவர் யார்?......................
(36) உலகின் சிறந்த ஓவியர் யார்?......................
(37) யாழ் நூலை எழுதியவர் யார்?..............................
(38) எமது நாட்டின் பிரதமர் பெயர்?............................
(39) இலங்கைக்கான சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் நாடு?..........
(40) இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம்?...............

**பின்வரும் இணை மொழிகளின் சரியான கருத்துள்ள சொல்லின் இலக்கத்தின் மேல் புள்ளடி இடுக**

(41) காய்கறி
(1) காய்கறிகளைச் சமைத்தல்
(2) தாவர உணவுப் பொருட்கள்
(3) சமைத்த உணவு


(42) தப்பித் தவறி
(1) தவறுதலாகச் செய்தல்
(2) திட்டமிட்டுச் செய்தல்
(3) தெரிந்து கொண்டு செய்தல்

ஆரோக்கியமான உணவு என்பது சத்துள்ள உணவுகளை மட்டும் குறிப்பதல்ல. சமையலறைச் சுகாதாரம், சமையலறைப் பொருட்களின் தரம், அவைகளைப் பாதுகாக்கும் விதம் என்பவற்றைப் பொறுத்தது. மீன், இறைச்சி, மரக்கறி வகைகளை கெடாமல் பல நாட்களுக்குப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

சமையலறைகளைச் சுத்தமாக வைத்திருக்கும் முறைகள் இரண்டு எழுதுக
(43) ..........................
(44)..........................
ஈ மொய்த்த உணவால் உண்டாகும் நோய்
(45)....................................
உணவை நீண்ட நாட்களுக்குப் பழுதடையாமல் வைத்திருக்க கூடிய மூன்று முறைகள்
(46)....................................
(47) ...................................
(48) ...................................
பின்வரும் பொருட்களை இரு வகையாக அட்டவணைப் படுத்துக
ஆணி அடித்த மரத்துண்டு, கரி, மரக்குற்றி, தகரம், அலுமினியம், குண்டூசி


| காந்தத்தால் கவரக் கூடியது | | காந்தத்தால் கவர முடியாதது | |
|---|---|---|---|
| (49) | | (52) | |
| (50) | | (53) | |
| (51) | | (54) | |

ஆக்கம் பாட ஆசிரியர் திருமதி யசிந்தா ராஜாவின் வழி காட்டலில் மாணவர்கள் செய்த ஆமையின் உருவம் இது



(55) இவ் உருவம் நகருமா? ------------------------
(56) நகர வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்?----
இவ் உருவம் செய்யத் தேவையான பொருட்கள்
(57) ---------------------- (58)------------------ (59)-----------

கீழே தரப்பட்டுள்ள அமைப்பு சூடான குளிரான நீரைக்கொண்ட முகவையினுள் அமிழ்த்தப்பட்டது. அப்போது திரவ மட்டத்திலேற்படும் மாற்றம் யாது?





| செயற்பாடு | திரவ மாற்றம் |
|---|---|
| (60) சூடான நீரில் அமிழ்த்தல் | .......................... |
| (61) குளிரான நீரில் அமிழ்த்தல் | .......................... |

(62) மேலேயுள்ள போத்தலுக்கு சுற்றிவரக் கறுப்புக் கடதாசி ஒட்டிவிட்டு நீரில் அமிழ்த்தினால் என்ன நடக்கும்?
(63) ஏன்?....................................
(64) சூட்டின் காரணமாக திரவம் ஒன்றின் அமைப்பில் மாற்றம் ஏற்படுமா?

**சரியான விடையைச் சுற்றிக் கட்டம் இடுக**
(65) வெள்ளி முலாம் பூசப்பட்ட கரண்டியின் உட்புறம்
(i) குழிவானது (ii) குவிவானது (iii) தளமானது
(66) அக் கரண்டியின் வெளிப்புறம்
(i) குழிவானது (ii) குவிவானது (iii) கூறமுடியாது

ஒரு தொழிற்சாலையில் 5 தினங்கள் உற்பத்தி செய்யப்பட்ட ரொபிகளினதும், பிஸ்கற்றுக்களினதும் விபரம் கிழே தரப்பட்டுள்ளது.




(67) மிகக் கூடுதலான ரொபி எத்தினத்தில் செய்யப்பட்டது?
(68) 1ம், 4ம் தினங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பிஸ்கட்டுக்கள் எவ்வளவு?
(69) 5 நாட்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட ரொபிகளின் விற்பனையின் பின் 3250 ரொபிகள் எஞ்சியிருந்தது எனின் விற்பனை செய்யப்பட்ட ரொபி எவ்வளவு?
(70) முதலாம் நாள் பிஸ்கற் உற்பத்தி மூலம் 3000 ரூபா லாபம் கிடைத்தது. இரண்டாம் நாள் எவ்வளவு இலாபம் கிடைக்கும்?
(71) இவ்வாரத்தில் இத் தொழிற்சாலையில் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டது ரொபி / பிஸ்கற்

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**
(72) பட்டி பெருக வேண்டும் தம்பிரானே பாடல்
(i) தொழில் சார்ந்தது (ii) பொழுது போக்கானது (iii) விளையாட்டுக்கான்து
(73) கோலாட்ட நடனம்
(i) கிராமிய நடனம் (ii) மேலைத்தேய நடனம் (iii) பரத நாட்டியம் ஆகும்
(74) உலகத்து நாயகியே பாடல்
(i) காவடி (ii) கரகம் (iii) கோலாட்டம் நடனத்துக்குரியது
75- 80 குடும்பத்தினருடன் கோயிலுக்குச் சென்று என்ற தலைப்பில் 6 வசனங்கள் எழுதுக.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



## இன்று ஒரு தகவல்

# வேலைக்காரனிடம் தவித்த பண்ணையார்

ஓர் ஊரில் பண்ணையார் ஒருவர் இருந்தார். அவருக்கு ஏராளமான நிலங்கள் இருந்தன. சருமியான அவர் தன் வேலைக்காரர்களைக் சசக்கிப் பிழிந்து நிறைய வேலை வாங்கினார். ஆனால் கூலியும் சரியாசத் தரமாட்டார். இதனால் அவரிடம் வரும் வேலையாட்கள் சில நாட்களிலேயே வேலையை விட்டு ஓடிவிடுவார்கள். அந்த ஊரிலிருந்த இளைஞனொருவன் 'நான் மட்டும் பண்ணையாருடைய வேலைக்காரனாக இருந்தால் அவரைக் கதற அடிப்பேன். அவரை ஓட ஓட விரட்டுவேனே தவிர நான் எங்கும் ஓடமாட்டேன்' என்று தன் நண்பர்களிடம் பெருமையாகப் பேசினான்.

இதைக்கேள்விப்பட்ட பண்ணையார் அவனை வரவழைத்தார். 'என்னிடம் உன்னால் பத்து நாட்கள் வேலை செய்யமுடியுமா? அதற்குள் ஓடிவிடுவாய்' என்று கேலியாகச் சொன்னார். 'நீங்கள் எவ்வளவு கூலி தருவீர்கள்? அதைச் சொல்லுங்கள். எனக்குப் பிடித்திருந்தால் வாழ்நாள் முழுமையும்இங்கேயே வேலை செய்கிறேன்' என்றான் அவன். நீவேலை செய்வதைப் பார்க்காமல் எப்படிக் கூலி பேசமுடியும்? நல்ல வேலைக்காரனுக்குப் பத்து மூட்டை நெல், இரண்டுவேளை சாப்பாடு, தேவையான உடை தருகிறேன் என்றார் அவர்.

'நான் நல்ல வேலைக்காரன்தான. எனக்கு நீங்கள் நாள்தோறும் ஓர்இலை நிறையச் சாப்பாடு மூன்று முறை போடவேண்டும். கண்டிப்பாக இரண்டாம்முறை சாப்பாடு கேட்கமாட்டேன். ஆண்டுக்கு ஒரே ஒரு நெல் கூலியாகத் தாருங்கள். அதையும் அதிலிருந்து விளையும் நெல்லையும் விதைக்க உங்கள் நிலத்தை எனக்குத் தரவேண்டும். உங்கள் விருப்பம்போல எனக்கு உடை தாருங்கள். இவை எனக்குப் போதும். நீங்கள் தரும் எல்லா வேலைகளையும் நான் ஒழுங்காகச் செய்வேன். வேலைக்குப்பயந்து நான்பாதியிலேயே ஓடிவிட்டால் என் வலது கைக்கட்டைவிரலைநீங்கள் வெட்டிவிடலாம், சொன்னபடி எனக்கு கூலி தரவில்லையானால் நான் உங்கள் கட்டைவிரலை வெட்டிவிடுவேன். இது குறித்து உங்கள் நண்பர்களுடன் கலந்து பேசுங்கள், நான் சொல்லும் கூலிக்கு நீங்கள் ஒப்புக்கொண்டால்; ஊரார் முன்னிலையில் இருவரும் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவோம், மறுநாளே நான் உங்கள் வேலைக்காரனாகி விடுவேன் என்றான் அவன்.

'ஒரே ஒரு இலை நிறைய மூன்று வேளை சாப்பாடு. ஆண்டுக் கூலியே ஒரு நெல் தான்' என்பதை அறிந்த பண்ணையாருக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. உடனே ஒப்பந்தம் எழுதினார் அவர். ஊரார் முன்னிலையில் இருவரும் அதில் கையொப்பம் இட்டனர். வேலையில் சேர்ந்த இளைஞன் பெரிய வாழை இலை ஒன்றை முழுமையாக வெட்டினான். அதை எடுத்துக்கொண்டு பண்ணையாரிடம் வந்தான், 'என்ன முழுவாழை இலையைக் கொண்டுவந்திருக்கிறாய்?' என்று எரிச்சலுடன் கேட்டார் பண்ணையார், 'நான் கொண்டுவரும் ஓர் இலை நிறையச் சாப்பாடு போடவேண்டும் என்பதுதான் ஒப்பந்தம்' என்றான் அவன். வேறு வழியில்லை என்பதை உணர்ந்தார் அவர். நாள்தோறும் முழுவாழை இலை நிறைய மூன்றுவேளை சாப்பாடு கிடைத்தது. அவனும் வயலில் உண்மையாக உழைத்தான்.

'நாம் இவனுக்கு இப்படிச் சாப்பாடு போட்டால் நம் கதி என்னாவது?' என்று கோபத்துடன் கேட்டாள் பண்ணையாரின் மனைவி, 'நல்லா உழைக்கிறான்; சாப்பிடட்டும். ஆண்டுக்கூலி ஒரு நெல்தானே' என்று பதில் சொன்னார் அவர். ஓராண்டு முடிந்தது. இளைஞனை அழைத்த அவர் இந்தா உன் ஆண்டுக் கூலி ஒரு நெல் இதைப் பாதுகாப்பாகவை. எலி குருவி எவையேனும்தூக்கிச் சென்றுவிடப் போகின்றன'' என்று கேலி செய்துகொண்டே கொடுத்தார். அவன் அந்த நெல்லை வயலில் ஒரு மூலையில் விதைத்தான். தன் வேலைகளுக்கு இடையே அதனை கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்தான். ஆறு மாதத்தில் அந்த நெல் செடி அவனுக்குக் கைப்பிடி நெல்லைத் தந்தது.

கிடைத்த நெல்லை விதைப்பதற்காக ஒப்பந்தப்படி பண்ணையாரிடம் சிறு நிலம் கேட்டான். கிடைத்த நிலத்தில் அதை விதைத்தான், அடுத்த ஆறு மாதத்தில் ஒரு கூடை நெல் அவனுக்குக் கிடைத்தது. மூன்று ஆண்டுகளில் பண்ணையார் நிலம் முழுவதும் அவன் நெல்லையே விதைக்க வேண்டி வந்தது. ''என் ஆணவத்தினால் இந்த இளைஞனிடம் மாட்டிக்கொண்டேனே. இனித் தருவதற்கு நிலம் இல்லையே என்ன செய்வது' என்று வருந்திய பண்ணையார் அவனிடமே வேலைக்குச் சேர்ந்தார். அவரின் நிலையைக்கண்டு இரக்கப்பட்டார்கள் ஊர் மக்கள். இளைஞனிடம் வந்த அவர்கள் ''எப்படி வாழ்ந்தவர், ஆணவத்தால் தலறிழைத்துவிட்டார். போனால் போகிறது— அவரை விட்டுவிடு என்றார்கள்.

''இவருக்காக இரக்கம் காட்டச் சொல்கிறீர்கள்? பழைய நிலையை நீங்கள் மறந்துவிட்டீர்களா? எத்தனை ஏழை மக்களை இவர் கசக்கிப் பிழிந்திருக்கிறார். அந்தப் பாவம் இவரைச் சும்மா விடுமா? ஒப்பந்தப்படி தன் கட்டை விரலை இழக்கச் சம்மதிக்கிறாரா கேளுங்கள்? இழந்த எல்லாவற்றையும் மீண்டும் அவர் பெற்றுக்கொள்ளலாம்'' என்று பதில் சொன்னான் அவன் தன் செயல்களுக்கு வருந்திய பண்ணையார் ''இளைஞனே! நான் செய்த பாவங்களுக்குத் தண்டனை அனுபவித்துவிட்டேன். இனி யாருக்கும் துன்பம் தரமாட்டேன். உன் அறிவுக் கூர்மையால் எனக்கு நல்ல பாடம் கற்றுத் தந்தாய். என் செயல்களுக்காக என்னை மன்னித்து விடு. என் ஒரே மகளை உனக்கு மணம் முடித்துத் தருகிறேன்'' என்றார். ஒரு நல்ல நாளில் இளைஞனுக்கும், பண்ணையாரின் மகளுக்கும் திருமணம் நடந்தது. அதன் பிறகு எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

- பேராசிரியர் ஏ. சோதி.

# மருதங்கேணி ஆஸ்பத்திரியை மீள இயக்குவது உடன் சாத்தியப்படாது

## நேரில் சென்றகுழு தெரிவிப்பு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி அரசமருத்துவமனையை உடனடியாக மீள இயக்ககூடிய சாத்தியக் கூறுகள் இல்லையென மீள இயக்குவது தொடர்பானநிலைமைகளை ஆராயசென்றசுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழு தெரிவிந்துள்ளது.

வடமராட்சிகிழக்கில் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளால் வைத்திய சாலையினுடைய கட்டிடங்கள் இடிந்து சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

புதிதாக அமைக்கப்பட்டு இடையில் விடப்பட்டிருந்த டாக்டர் விடுதி ஒன்றுமட்டும் சேதமடையாது காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமையில், மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு வாரத்தில் ஒருதடவை மருத்துவமுகாம் ஒன்றினை மருதங்கேணிஇந்து தமிழ்கலவன் பாடசாலை உடுத்துறை ஆகிய பகுதிகளில் நடாத்த திட்டமிட்டுள்ளது.

ஆரம்ப நடவடிக்கையாக உடுத்துறைப்பகுதியில் மருத்துவவசதி களின்றி இருந்த20 பேருக்கு சுகாதாரவைத்திய அதிகாரி ந. ஞானசுதன் சிகிச்சை அளித்தார்.

பொது சுகாதார பரிசோதகரால் கிணறுகளுக்கு குளோரின் வழங்கப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ந. ஞானசுதன் மலேரியா தடுப்பு பிரிவு அதிகாரி எஸ். வர்ணகுலசிங்கம். பொதுசுகாதார பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர்கள் அடங்கிய ஏழுபேர் கொண்டகுழு மருதங்கேணி மருத்துவமனை தொடர்பாக ஆராயச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-23)

### உலகத் தரத்துக்கு இணையான

# விளையாட்டு வீரர்கள் யாழில் இலைமறை காயாக உள்ளனர்

## எதிர்வீரசிங்கம் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

மறைமுகமாக உள்ள விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிப்படுத்தச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இந்த எண்ணப்பாட்டிற்கு ஓரளவுக்காவது செயல் வடிவம் கொடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு போட்டிகளின் இறுதி நாள் விழா யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்றபோது, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஆசிய விளையாட்டு விழாவில் உயரம்பாய்தலில் தங்கப்பதக்கம் பெற்று யாழ்ப்பாணத்திற்குப் பெருமை சேர்த்த எதிர்வீரசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

ஏனைய உலக நாடுகளின் வீரர்களுக்குசரிநிகரான வீரர்கள் யாழ். குடாநாட்டில் இலைமறை காயாக உள்ளனர்.

அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் உலக அரங்கில் எமது விளையாட்டு வீரர்களின் பெயர்களைப் பொறிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

(உ-10)

## பயணிகள் நிழற்குடை சேதம்

(துன்னாலை)

சாவகச்சேரி நகரப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த, பேருந்துப் பயணிகள் நிழற்குடை கடந்தகால போர் அனர்த்தங்களினால் மிகவும் சேதமடைந்துள்ளது.

இதனால், வெயில் மற்றும் மழைக்கு மத்தியில் பயணிகள் பேருந்துக்காகக் காத்து நிற்கின்றனர்.

(உ-41)

## எதிர்கால சமுதாயத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

'எதிர்காலத்திற்கான சமுதாய முன்னெடுத்தல்திட்டம்' யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் கெயர் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

அர்ப்பணிப்புடன்சமூகமுன்னேற்றத்திற்காக உழைப்பதற்கான திறமையும், சாதிக்கும் ஆற்றலும் உள்ள குழுவொன்று இதனை அமுல்படுத்தத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம்முதல் திட்டத்தின் பூர்வாங்கவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(உ-6)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படும் நடவடிக்கை எதிர்வரும் 29 ஆம்திகதிஇடம் பெறவுள்ளது.

வேலணைப்பொதுச்சுகாதாரப் பரிசோதகரும்வேலணைப் பிரதேச சபையும் இணைந்து இந்நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

அன்றைய தினம் வளர்ப்பு நாய்களை கட்டி வைத்து ஒத்துழைப்பு வழங்குமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ-75)

# தொழில்நுட்பக்கல்லூரியில் அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் சமகாலஅரசியல்நிலை தொடர்பான கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் மு.ப 10 மணிக்கு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது.

தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி, மற்றும்விடுதலைப் புலிஉறுப்பினர்கள் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து வன்னியிலிருந்து வருகை தந்த சமாதனத்திற்கான கலாசாரக் குழுவினர் புதுவை அன்ரனியின் நெறியாளுகையில் உருவாக்கப்பட்ட 'கரை தேடும் ஓடங்கள்' எனும் நாடகமும் இடம்பெற்றது.

(ந)

## பயனாளிகளை பங்காளிகளாக்கல்

(காரைநகர்)

காரைநகர்சாம்பலோடைப் பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ், பல இலட்ச ரூபா செலவில் பாரிய கடல் அணைகள் அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் பயனாளிகளை, பங்காளிகளாக்கும் பொருட்டிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கள் கிழமை காரைநகர் மத்தி சிவகாமி அம்மன் கோவிலடியில், நியாப் நிறுவன உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டது.

(உ-246)

## சிந்தனைக்கு விருந்து

### தொண்டர் ஆசிரியர் மாற்றாந்தாய் மக்களே

'தொண்டர்ஆசிரியர் என்றால்
தொண்டையே செய்தல் வேண்டும்
உண்டியைச் சுருக்கி நல்ல
உடைமறந்திடுவீர் நீங்கள்
விண்டிடல் வேண்டாம் வேலை
நிரந்தரம் கிட்டா' தென்றே
கொண்டிடல் அறமோ? மாற்றாள்
குழந்தைகள் அவரோ கூறும்.

- பழையவன்

### கஷ்டப்பிரதேசங்களுக்கு சுயவிருப்பின் பேரில்

# இடம்மாறிச் செல்லும் ஆசிரியர்களுக்கு

# ஒய்வூதியம் பெறும்வரை விசேட கொடுப்பனவு

## கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

கஷ்டப்பிரதேசபாடசாலைகளில் சுயவிருப்பின் பேரில் இடமாற்றம் பெற்றுச்சென்று தொடர்ந்து 3வருடங்களாக கடமையாற்றி வரும்ஆசிரியர்களுக்கு ஓய்வூதியப்பெறும் காலம்வரை விசேட கொடுப்பனவை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக மட்டக்களப்பு வலயக் கல்விபணிப்பாளர் எஸ். பவளகாந்தன் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருஆசிரியரும் பின் தங்கியபிரதேச பாடசாலைகளில் கட்டாயம் சேவையாற்ற வேண்டும்என்ற அரசகொள்கைகளிற்கு இணங்க இடமாற்றம் செய்யப்படுபவர்களுக்கு இந்தக்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

காத்தான்குடியில் அமைந்துள்ளஆசிரியர் வளநிலையத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்தகாலங்களின் போது வடக்குகிழக்கு மாகாணங்களில் புறக்கணிக்கப்பட்டுவந்த கஷ்டப்பிரதேச மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டம் அமுல்படுத்தப் படுவதாகவும் அவர்அங்குதெரிவித்துள்ளார்.

(உ-8)

## நூற்றாண்டு விழாமண்டப திறப்பு விழா

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு மண்டபத் திறப்புவிழா இன்று பி.ப. 2 மணிக்கு அதிபர் இ. இராகவன்தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் பாடசாலையின் பெயர் வளைவை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசாவும், நூற்றாண்டு நிறைவு மண்டபத்தினை வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ரி. செல்வரட்ணமும் திறந்து வைக்கவுள்ளனர். (உ-23,41)

## காலாவதியான உணவுப் பொருட்கள் அழிப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணைப்பகுதியில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்களில் இருந்த காலாவதியான உணவுப் பொருட்கள் அண்மையில் கைப்பற்றிஅழிக்பட்டன.

வேலணைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் சென்ற குழுவினரே காலாவதியான பால்மாவகைகள் பிஸ்கட்வகைகள் என்பவற்றைக் கைப்பற்றி அழித்தனர்.

அத்துடன், தொடர்ந்தும் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைசெய்யும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (உ-75)

## இலக்கத்தகடுகளை பெறுமாறு அறிவுறுத்து

(மந்திகை)

எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் துவிச்சக்கர வண்டிகளுக்கான இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறும்,

தவறுவோர் மீது பொலிஸாரின் உதவியுடன் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பருத்தித்துறை நகரசபை உபதலைவர் நா. மணிவண்ணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, நகரசபை உப அலுவலகம் மற்றும் முக்கிய சந்திகளில் வைத்து இலக்கத் தகடுகள் விநியோகிக்கப் படுகின்றன. (உ-23)

### சட்டவிரோத மின்சாரம் பெற்ற

## இளவாலை வாசிகளிடம் தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றுவந்த நால்வர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, தலா ஆயிரம் ரூபா தண்டப்பணம்செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இளவாலை வாசிகளே மேற்படி குற்றத்தின் பேரில் சுன்னாகம் பொலிஸாரினால் நீதிமன்றில் ஆஜர் செய்யப் பட்டபோது, அவர்களை எச்சரித்த நீதிவான் பா. சுப்பிரமணியம்-

தண்டப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப் படும் என எச்சரித்தார்.

(உ-10)

## உடத்தலவின்ன படுகொலை சந்தேக நபர்கள் பலர் விரைவில் கைதாகலாம்

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை சம்பந்தமாக இன்னும் பலசந்தேக நபர்களை கைது செய்ய வேண்டும் என தெல்தெனிய நீதிபதி இனோகா றணசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் மேற்படி வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில், முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அவரது மகன் றொகான் ரத்வத்தை உட்பட 17 சந்தேக நபர்கள் ஆஜர் படுத்தப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதே வேளை சானுக ரத்வத்தை சுகவீனம் காரணமாக நேற்று நீதிமன்றில் ஆஜராகவில்லை.

இச் சம்பவத்திற்கு பாவிக்கப்பட்டதாக கூறப்படும் வாகனங்களில் எந்த வித தடயங்களும்இல்லாததால் அதை பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறும், உத்தர விடப்பட்டது.

வழக்கு விசாரணை எதிர் வரும் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (உ-9)

## பேருந்துச் சேவை ஆரம்பிக்குக

(துன்னாலை)

தென்மராட்சியில் இருந்து வடமராட்சியில் இடம் பெயர்ந்து வசிக்கும் மாணவர்கள், மீள இயங்க ஆரம்பித்துள்ளதமது பாடசாலைகளில் சென்று கற்க வசதியாக பேருந்துச் சேவையை நடத்துமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-41)

## ஆலயத்தில் அடிதடி இருவர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

ஆலயத்தில் இடம்பெற்ற இரவு இசை நிகழ்ச்சியின் போது இரு தரப்பினர்க்கிடையே ஏற்பட்ட அடிதடியில் இருவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மிருசுவில் வடக்கு மன்னங்குறிச்சி கந்தசாமி கோவிலில் கடந்த செவ்வாயன்று இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இசைநிகழ்ச்சி இடம்பெற்றுக் கொண்டிருந்த இடத்திற்கு வந்த இளைஞர் குழுவொன்று பெண்களைநோக்கி கற்களை வீசியதாகவும்.

இதனால் ஆத்திரமுற்ற அங்கிருந்த இளைஞர்கள் அவர்களைக் கண்டிக்க முற்பட்டவேளைஇருதரப்பினர்க்கும் இடையே அடிதடி இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

மன்னங்குறிச்சியைச்சேர்ந்த வி.விவேகானந்தன்(வயது47) என்.நதீசன் (வயது 19)ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (உ-23)

## சித்த மருத்துவ பீடம் ஜூன் நடுப்பகுதியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவ பீடம் மீண்டும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி முதல் கைதடியிலுள்ள சொந்தக்கட்டடத்தில் இயங்கவுளளது.

யாழ்.பல்கலைக் கழகத்தின் பதிவாளர் மற்றும், பிரதம தொழில்நுட்பவியலாளர் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்றைய தினம் சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்று மீளஇயங்குவது தொடர்பாக ஆராய்ந்தனர். (உ-19,5)

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைக் கல்வி நிலையம், மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு நான்கு மாத கால கத்தோலிக்க மறை தொடர்பான பயிற்சிவகுப்பை நடத்தி வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் இவ்வாறான பயிற்சிவகுப்பு நடத்தப்படுவதுகுறிப்பிடத்தக்கது. (உ-6

## 90 பௌத்த குருமார் இன்று யாழ். வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்துக்கான நல்லாசி வேண்டி.மல்வத்தபீடாதிபதி தலைமையிலான 90 பௌத்த மதகுருமார் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இன்றுயாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவர்கள் இன்று நாகவிகாரையில் இடம் பெறும் கலசம் வைக்கும் நிகழ்வுகளில பங்கு கொள்ளவுள்ளனர்.

(உ-6)

## விதை நெல்லுக்கான தட்டுப்பாட்டை நீக்குக

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டுபெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டமையினால்,இவ்வருடம்விதை நெல்லுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென உடுவில் விவசாயிகள் சம்மேளனம் கமநல சேவைத்திணைக் களத்திடம் கோரியுள்ளது.

(உ)

### விலைமதிப்பீட்டு திணைக்களத்தில்

## போதிய ஆளணி இல்லை சேவைகள் மந்த கதியில்

(யாழ்ப்பாணம்)

போதிய ஆளணி இன்மையால்தமதுசேவைகளை பூரணமாக வழங்க முடியாதுள்ளதாக விலைமதிப்பீட்டுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1990 ஆம் ஆண்டுகளின் முன்னர் போதிய ஆளணியைக் கொண்டு விளங்கிய இத் திணைக்களத்தில் தற்போது 7 பேர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் சோலைவரிகளை அறவிடுவதில்பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப் பட்டது. (உ-10)

## ஐந்து சட்ட மூலங்கள் விவாதமின்றிநிறைவேற்றம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் ஐந்து சட்ட மூலங்கள் அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இந்தச்சட்ட மூலங்கள் விவாதம் இன்றி நிறைவேற்றப்பட்டன.

இலங்கைமுதலீட்டுச்சபைத் திருத்தச் சட்டமூலம், நிதிச் சட்ட மூலம், தேசியவருவாய் விசேட ஏற்பாட்டு சட்ட மூலம். தேசிய வருவாய் திருத்தச் சட்ட மூலம் தேசத்தைப் பாதுகாப்பதற்கான சந்தாப்பணத்தை நீக்கும் சட்ட மூலம் ஆகிய ஐந்து சட்ட மூலங்களும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளன. (த)

## மண் அணையை அகற்ற படைத்தரப்பு இணக்கம்

(மந்திகை)

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தைச் சுற்றியுள்ள மண்அணையை அகற்றுவதற்கு படைத்தரப்பில இணக்கம் தெரிவிக்கப்பட்டுளது.

மாலுசந்திஇராணுவமுகாம் அமைந்திருந்த பகுதியில் உள்ள இப் பாடசாலையைச் சுற்றி காப்பரண்கள், மண் அணைகள் என்பன காணப் படுவதால்,

பாடசாலையை இயக்குவதில் உள்ள சிரமங்கள் குறித்தும், அகற்றப்படுவதன் அவசியம் குறித்தும் அதிபர் கே. பூரணானந்தம் விடுத்த கோரிக்கையைஅடுத்தேபடைத்தரப்பு மேற்கண்ட இணக்கப் பாட்டைத் தெரிவித்துள்ளது.

(உ-23

### யுத்த காலத்தில்இறந்த ஆசிரியர்களுக்கு

# கடமையிலுள்ள ஆசிரியர்களுக்குள்ள சகல சலுகைகளும் வழங்கப்படும்

(கொழும்பு)

நாட்டில் யுத்த காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களில் இறந்த அல்லது காணாமல் போன அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வு மற்றும் வேறு சம்பள அதிகரிப்புகளையும் வழங்குமாறு வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் க. சண்முகலிங்கம் வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.


இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்ட போது உயிரிழந்தவர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. இதற்குப் பின் பயங்கரவாத சம்பவங்களின் போது இறந்த அல்லது காணாமல் போனவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.


இது சம்பந்தமாக பாதிக்கப் பட்டவர்கள் மாகாண கல்வி அமைச்சருக்கு மேன் முறையீடு செய்ததன் காரணமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதே, வேளை,

அரச அலுவலர் ஒருவர் சேவையில் உள்ள காலத்தில் ஏதாவது பயங்கரவாத நடவடிக்கையில் இறப்பாராயின் அவரது சம்பளம் மற்றும் சம்பள ஏற்றங்கள் உயிரோடு இருப்பதாக கருதப்பட்டு வழங்கப்படுமென இது குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ-9)

# அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 2002





ஆலயத்தின் அழகுத் தோற்றம்



## அம்பலத்தானுடன் ஆடிடும் அம்பிகை வருக

பிரபஞ்சமெனும் தேரதில்
பிந்துவாசினி பத்திரகாளி
முந்து சமயங்கள் ஆறினும்
முதல்வி சுந்தரி நீலி
அருள் சுரக்கும் அன்னை
அம்பலத்தானுடன் ஆடிடும்
அம்பிகை மாதரி நிகும்பசுதலி
அன்பர்கள் காண வருகவே!

வஸ்வப்பிரம்மச்செல்வன்
**இ. சிவனேசன்**

## 64கலைகளுக்கும் தலைவியே வருக!

நாகர்கள் அசுரர்கள் தேவர்கள்
எனும் பதினென் கணத்தினரும்
கருதி வழிபடும் காளிகா பரமேஸ்வரியே
ஐந்தொழிலுக்கும் வித்தான அம்பிகையே
சுந்தரி திரிபுரங்கள் கடலாடி
வேவச் சினத்தவளே திரிபுரசுந்தரியே
அருவாளர் குலமுதல்வி அறுபத்து நான்கு
கலைகட்கும் தலைவி வருக வருகவே!

விஸ்வப்பிரம்மச்செல்வன்
இ. அச்சுதபாகன்

## அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மஹோற்சவ பிரதம குருவின் ஆசி

அண்ட சராசரங்களின் நாயகியாக விளங்குகின்ற அன்னை பத்திரகாளி அம்பாளுக்கு அடியார்களின் பெரும் பேருதவியால் புதிய சித்திர தேர் உருவாக்கப்பட்டு நான்காவது தடவையாக அம்பாள் தேரில் பவனி வருகிறாள். நானும் இந்த ஆலயத்திலே நாற்பத்தைந்து வருட காலமாக நித்திய நைமித்திய கிரியைகளை நடாத்தி வருகின்றேன் என்ற வகையில் இந்த ஆலயம் மென்மேலும் சிறந்து விளங்க வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு அடியார்கள் அனைவரும் சீரும் சிறப்பும் சகல செல்வங்களும் பெற்று சாந்தியும் சமாதானம் இந் நாட்டிலே நிலவ அம்பாளின் தேர் பவனி நடைபெறும் இந்நாளில் பிரார்த்திப்போமாக

இப்படிக்கு
பிரதிஸ்ட்டா சிவ ஸ்ரீவித்வஜோதி
*மகாகணபதீஸ்வரக்குருக்கள்*

பக்க வடிவமைப்பு:-
காளிகோவிலடி ச.ச.நிலையம்

## தேரின் தத்துவம்

சிற்பத் தேர்கள் மூன்று பெரும் பாகங்களாக பிரிக்கப்படுகின்றன.

01) பிரம்ம பாகம்
02) விஷ்ணு பாகம்
03) உருத்திர பாகம்

பிரம்ம பாகம்:- அச்சு முதல் பத்மஆசனம் வரை
விஷ்ணு பாகம்:- சிம்ம ஆசனம் முதல் பந்தல் வரை
உருத்திர பாகம்:- பந்தல் முதல் கலசம் வரை

பிரம்ம பாகம்:- தேரின் சக்கரங்கள் நான்கு மார்க்கங்களை குறிக்கும். இந்த ஒரு மார்க்கத்தில் ஒன்றில் நின்றுதான் ஆனமாக்கள் உருள்வன. அச்சு-மூலாதாரம், குண்டலினி சக்திபார்கள், பஞ்ச பூதங்கள், அதன் மேற்பகுதி-சுபதிஸ்டானம், அதன் மேற்பகுதி-மணிபூரகர் (நாவித்தாளம்-தசேந்திரியர் என்பன), அதற்கு மேல் ஐந்தவத்தை, ஐங்கோசம், இராததாதி குணங்கள் என்பன.

விஷ்ணு பாகம்:- சிம்மாசனம்(பீடம்) - இறைவன் எழுந்தருளி அருள் கொடுக்குமிடம். சாரதி-மும்மூல ரூபமும், நாசியும், இதன் நடுப்பகுதி அந்தகரணங்கள், குத்துக்கால்கள் (32 தத்துவங்கள்), குதிரை வடிவங்கள்-இரு குதிரைகள் இடப்பாக சந்திர சூரிய கலாவாசிகள். வலப்பாக சந்திர சூரிய கலாவாசிகள் நான்கு வேதங்களாகவும் கொள்ளப்படும்.

உருத்திர பாகம்:- புருவமத்தி-3ம் அடுக்கு:- மஸ்தகாந்த ஸ்தானம், இலலாட மத்திய ஸ்தானம் மஸ்தக மத்திய ஸ்தானம், மஸ்தக ஆதித் தானம், துவாத சாந்தத் தானம், சோட சாந்தத்தானம்(கலசம்), உச்சிக்குடை-பிரம்ம மந்திரம்:- வேறு தோன்றாதவாறு பதியில் லயப்பட்டு நிற்றலை குறிக்கும்.

இவ்வாறான தத்துவம் பெற்ற இவ் அம்பாளின் சித்திரத் திருத்தேர், திருநெல்வேலி ஸ்ரீ வாணன் சிற்பாலய இயக்குனர், சிற்பமேதை, சிற்பச்சக்கிராதிபதி ஸ்தபதி அமரர் செ. கந்தசாமி அவர்களின் தலைமையில் 1999ம் ஆண்டு சிருஷ்டிக்கப் பெற்றது. இத் திருத்தேரில் அம்பாள் நான்காவது தடவையாக உலா வந்து அருள் பாலிக்கிறாள்.

ஸ்தபதி:-
*விஸ்வப் பிரம்ம ஸ்ரீ*
செ. பாலச்சந்திரன் ஆச்சாரியார்

தூஸ் ஸ்ரோர்ஸ்
காலாசாலைவீதி திருநெல்வேலி

நாளைய நாகரிகத்தின் இன்றைய முன்னோடிகள்
ஏசியன் புடவையகம்
பலாலி வீதி திருநெல்வேலி

சிற்ப சாத்திரமுறைப்படி தேர், மஞ்சம் மற்றும் வாகனங்கள் செய்து கொடுப்பவர்கள்
ஸ்ரீ காளிகா சிற்பாலயம்
பத்திர
காளிகோவிலடி திருநெல்வேலி
ஸ்தபதி செ.பாலச்சந்திரன்

தேரேறிவரும் பத்திரகாளி
அம்பிகையே உன் அருளால்
நாட்டில் சாந்தியும்
சமாதானமும் மலர அருள்
தாராயோ
இ.சிவநேசன் திருநெல்வேலி

TCSC
(திருநெல்வேலி மத்திய விளையாட்டுக்கழகம்)
இளைஞர்கள் திருநெல்வேலி

தையல் கலையின் முன்னோடிகள்
சுப்பர் ஸ்ரார் ரெயிலறிங்
SUPPER STAR TAILORING
ஆடியபாதம் வீதி திருநெல்வேலி

சகல விதமான உணவு வகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்!
பலாலி வீதி திருநெல்வேலி

424A.கே.கே.எஸ்வீதி யாழ்ப்பாணம்

பல சரக்கு பொருட்கள் கால்நடை தீவனங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஜங்கரன் களஞ்சியம்
பலாலி வீதி திருநெல்வேலி

வேல்முருகன் கபே
பலாலி வீதி திருநெல்வேலி

பலாலி வீதி திருநெல்வேலி

சகல விதமான உள்நாட்டு வெளி நாட்டு அழைப்புகளை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள
கஜன் கொமினிக்கேசன்
பலாலி வீதி திருநெல்வேலி

# பாகிஸ்தானுக்கு எதிராகப் போரிடும் தருணம் வந்துவிட்டது பொங்கி எழுக!

## களத்தில் நின்று வாஜ்பாய் அறைகூவல்

(புதுடில்லி)
மறைமுகத் தாக்குதல் நடத்திவரும் பாகிஸ்தானுக்கு எதிராக போரிடும் தருணம் வந்துவிட்டது.

இந்தியக் குடிமகன் என்று தன்னைத் தான்மார் தட்டிக் கொள்ளும் ஒவ்வொருவரும் பொங்கி எழவேண்டும் இது ஒரு புனிதப் போர் எனும்ரீதியில் விழித்தெழ வேண்டுமென்றுபிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் அறை கூவல் விடுத்துள்ளார்.

இந்திய பாகிஸ்தான் எல்லையான சர்ச்சைக்குரிய காஷ்மீர் பகுதிகளுக்கு சென்றுபோராடிவரும் இந்தியப் படையினரை நேரில் சென்று பார்வையிட்ட போதே அவர் இவ்வாறுகுறிப்பிட்டார்.

மேலும் தெரிவிக்கையில்;
இந்திய வீரர்களுக்குப் பின்னால் ஒவ்வொரு இந்திய குடிமகனும் போருக்குத் தயாராக நிற்கின்றனர்.

கார்க்கில் போரை முறியடித்தது போல் இந்த யுத்தத்தையும் வெற்றிகொள்வோம்.

இந்தியாவை இலேசாக நினைத்து அதனிடம் வாலாட்ட முற்படுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் அனுதாபத்திற்குரியவர்கள். கார்க்கில் போரையும் அதில் இந்தியாநடத்திய அதிரடித்தாக்குதலையும் மீண்டும் ஒருமுறை நினைத்துப்பார்த்த பின்னர் இந்தியாவுடன் போரை ஆரம்பிப்பது ஒரு வழிக்கு அவர்களுக்கு நன்மையை தரும் என்று எச்சரித்துள்ளார். (உ-7)

## கோயம்புத்தூர் வெடிவிபத்து மூவர் பலி

(கோயம்புத்தூர்)
கோயம்புத்தூரில் இடம் பெற்ற வெடிவிபத்தில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி மாவட்டத்தில் உள்ள 2 மாடிகள் கொண்ட வெடி மருந்து தொழிற்சாலையின் கீழ்த்தளத்தில் ஏற்பட்ட இவ் வெடிவிபத்தினால் வாகனங்கள் சில கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி சேதமடைந்துள்ளன.

விபத்து இடம் பெற்றமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. (உ-7)

## சிங்கப்பூர்- தாய்லாந்து கூட்டு இராணுவ ஒத்திகை

(சிங்கப்பூர்)
சிங்கப்பூரும் தாய்லாந்தும் இணைந்து கடற்படை மற்றும் இராணுவ ஒத்திகைகளை நடத்தி வருகின்றன.

அண்மைக்காலம் முதல் ஆரம்பமான இப் படைகளின் ஒத்திகை தொடர்ந்து 15 நாட்கள் இடம்பெறவுள்ளதாக சிங்கப்பூரின் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளையும் சேர்ந்த 14 பாரிய யுத்தக் கப்பல்களும் 120 கடற்படையினரும் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (உ-7)

# உலக தரிசனம்

## ஆப்கானில் மீண்டும் தாக்குதல் அமெரிக்கா ஆரம்பித்தது

(வாஷிங்டன்)
ஆப்கானின் கிழக்குப் பகுதிகளில் அமெரிக்கா மீண்டும் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளது.

ஆப்கான் படையினரின் குண்டுத் தாக்குதலில் அமெரிக்க படைவீரர் ஒருவர் பலியானதைத் தொடர்ந்து ஆப்கான் மீது அமெரிக்கா நேற்று முன்தினம் மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளது.

அமெரிக்காவின் மேற்படி தாக்குதலுக்குபிரிட்டன்ட்டைகளும் பக்கத்துணை வழங்கியதாகவும்தாக்குதலில் இதுவரை எவரும் இறந்ததாக தெரியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஆப்கான் மீதான முதலாவது தாக்குதலை கடந்தடிசெம்பர்மாதம் அமெரிக்கா நடத்தியதும் குறிப்பிடத்தக்கது (உ-7)

## அமெரிக்காவிலுள்ள முஸ்லிம்களுக்கு அல்கெய்டா முன்னெச்சரிக்கை

(வாஷிங்டன்)
அமெரிக்காவில் உள்ள முஸ்லிம்களைஉயர்மாடிக்கட்டடங்களில வசிக்க வேண்டாமென்றும், விமானங்களில் பயணம் செய்ய வேண்டாமென்றும் அல்கெய்டா இயக்கத்தினர் எச்சரித்துள்ளனர்.

இல்கெய்டா அமைப்பின் பேச்சாளர் சுலைமான், சர்வதேச ஊடகங்களுக்கு அனுப்பி வைத்தஒளிநாடாவில்இதனை தெரிவித்தார்.

அமெரிக்கா மீது பின்லேடன் தலைமையிலான அமைப்பு இரண்டாவது முறையாக தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாலும.

இத்தாக்குதலையும் கடந்த செப்டெம்பர் மாதம் இடம்பெற்ற தாக்குதலைப் போன்றே விமானம் மூலம் நடத்த திட்டமிட்டுள்ளதாலும், உயர்மாடிக் கட்டடங்களில் வாழும் முஸ்லிம்களுக்கும், விமானத்தில் பயணம் செய்யும் முஸ்லிம்களுக்கும் இவ் எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## லெபனானில் வெடிகுண்டு அச்சுறுத்தல் தொடர்கிறது

(பெய்ரூட்)
லெபனானில்இன்னுமொரு குண்டு வெடிக்கும் அபாயம் இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து தலைநகர் பெய்ரூட்டின் பிரதான வீதி உட்பட பலமுக்கிய வீதிகள் மூடப்பட்டுள்ளதுடன் தலைநகரில் பதற்றம் நிலவி வருகிறது.

வாகனமொன்றில் சக்தி வாய்ந்தகுண்டுஒன்றுபொருத்தப்பட்டுள்ளதாகவும் அது தலைநகரின் முக்கிய பகுதிக்குள் சென்றவுடன் வெடித்து சேதத்தை உண்டாக்கும் எனவும் புலனாய்வு பொலிஸாருக்கு தகவல்கிடைத்துள்ளது.

இதேவேளை, கடந்த செவ்வாய் லெபனானில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் தீவிரவாத அமைப்பொன்றின் தலைவரின் மகன் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## இந்தோனேசியாவில் சுகார்ட்டோ அபிமானிகள் பொலிஸார் மோதல்

(ஜகார்த்தா)
இந்தோனேஷியாவின் முன்னாள் ஜனாதிபதி சுகார்ட்டோவின் ஆதரவாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் காலை மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

சுகார்ட்டோ பதவி நீக்கம் செய்யப்பட்டு 4 வருடங்கள் பூர்த்தி தினமான நேற்று அவரின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தை தடுக்க முற்பட்ட பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்கும் இடையிலேயே மோதல்கள் வெடித்துள்ளன. (உ-7)

## ஜெயாவின் பாதுகாப்பு பலம்

(புதுடில்லி)
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு எதிராக சட்டசபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பின்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனதமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறுபான்மை இனத்தவருக்கு பாதகமாகவும் பெரும்பான்மை இனத்தவருக்கு சாதகமாகவும் திட்டங்களை ஜெயலலிதா மேற்கொள்வதால் அவருக்குஎதிர்ப்பு அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. (உ-7)

## திருத்திய வீதிகளுக்கு தாரிடல்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட, அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட வீதிகள் அனைத்துக்கும் மீண்டும் விரைவில் தார் ஊற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-19)

## தற்கொலைத் தாக்குதல்களுக்கு அல்கெய்டா அமைப்பு தயாராகிறது

(வாஷிங்டன்)
இஸ்ரேலில் இடம்பெற்றுவரும் மனித வெடிகுண்டுகளைப் போன்று அமெரிக்காவில் தீவிரவாதிகள் மனித குண்டுவெடிப்புக்களை நடத்த திட்டமிட்டு வருவதாக கிடைக்கப்பட்ட தகவலை அடுத்து அமெரிக்காவின் சகல பகுதிகளிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த மார்ச் மாதம் தீவிரவாதக் குழுக்களின் உச்சி மாநாடு லெபனானில் நடந்துள்ளதாகவும் முன்னெப்போதும் நிகழாத இத் தீவிரவாதிகளின் மாட்டில் ஒஸாமாபின் லேடனின் அல்கெய்டா அமைப்பு லெபனானின் கிஸ்புல்லா கெரில்லாக்கள் மற்றும் மத்தியகிழக்கு கமாஸ் தீவிரவாத அமைப்பு ஆகிய தீவிரவாத அமைப்புகள் கலந்து கொண்டதாகவும் அமெரிக்க ஏ.பி.சி. செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க, மற்றும் பிரிட்டன் போன்ற வல்லரசு மீது தாக்குதல்நடத்தும் வியூகம் பற்றி அம்மாநாட்டில் பேசப்பட்டதாகவும் ஏ.பி.சி. செய்தி தெரிவித்துள்ளது. (உ-7)

## பெனாசிர் பூட்டோ விரைவில் கைதாகலாம்

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தான் நீதிமன்றத்திற்கு சமுகம் அளிக்கத்தவறிய பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பெனாசிர் பூட்டோவுக்கு 3 வருட சிறைத் தண்டனையை அந் நாட்டு நீதிமன்றம் வழங்கியுள்ளது.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றிடம் லஞ்சம் வாங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தான் அரசு அவருக்கு எதிராக வழக்குத் தொடுத்திருந்தது.

பெனாசீர் பூட்டோ வெளிநாடொன்றில் தங்கியிருப்பதால் மேற்படி வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அவரை வருமாறு அழைப்பாணைவிடுக்கப்பட்டும் அவர் நீதிமன்றத்திற்கு சமுகம் அளிக்காததையிட்டு 3 வருட சிறைத்தண்டனையை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதேவேளை, அடுத்த வாரமளவில் பூட்டோ கைதுசெய்யப்படுவார் என்று அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-7)

## ரோஹ்ரக் விருது ஜக்கி ஜானுக்கு

(லண்டன்)
இவ்வாண்டுக்கான சிறந்த சண்டை நடிகருக்கான விருது ஹொங் கொங்கின் ஜக்கி ஜானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விருது வழங்கும் விழாவில் ஜக்கி ஜான் இவ்விருதைப் பெற்றுக் கொண்டார்.

சிறந்த சண்டை நடிகர் விருதான ரோஹ்ரக் என்ற விருது கடந்த வருடம் அமெரிக்க நடிகருக்கு வழங்கப்பட்டது தொடர்ந்து அமெரிக்க நடிகர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விருது இவ்வாண்டு ஹொங்கொங் நடிகருக்கு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நடிகர் ஜக்கி ஜான் அபாயகரமான சண்டைக் காட்சிகளுக்கு கணனி கிராப்பிக்ஸ் எதுவும் பயன்படுத்தாது உயிரைப் பணயம் வைத்து நடித்துவருவதால் பலதடவைகளில் உயிராபத்திலிருந்து தப்பித்துள்ளார். (உ-7)

## துப்பாக்கியால் சுட்ட பௌத்தமதத் துறவி கைது

(தைபி)
தாய்லாந்து நாடாளுமன்றத்தின் வளாகத்தில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட பௌத்த மத துறவி ஒருவரை நேற்றுமுன்தினம் தாய்லாந்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாட்டின் ஆட்சியாளர்களுடன் எதிர்க்கட்சியினர் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் தன்னை கடுமையாக கண்டித்ததால் அதற்குஎதிர்ப்புத் தெவிரித்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும்குறிப்பிட்ட மதகுரு தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து, பௌத்த குருமார்கள் மரியாதையாக நடத்தப்படவேண்டும் என்ற சட்டம் அமுலில் இருந்து வந்தபோது, அதனை பொலிஸார் அவமதித்துள்ளனர் என்று தாய்லாந்து மத குருமார்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். (உ-7)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா.
எஞ்சாமை எண்ணி இடத்தாற்செயின்.

குறள்

# வலம்புரி

## விபத்தை தடுக்

யாழ் நகரப் பகுதியில் வீதிப் போக்குவரத்து நடவடிக்கைகளில் பொலிஸார் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். பாராட்டுதற்குரியது. அதேநேரம் பயணிகளின் நலன்களையும் சரியான முறையில் பேணுவது பாதுகாப்புப் பகுதியினரின் கடமையாகும்.

சாரதி அனுமதிப் பத்திரத்தை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள முடியாதநிலையில் சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கேட்பது சட்ட ரீதியாக செல்லுபடியானதாக இருந்தாலும் நாட்டின் ஆட்சி நியாயத்துவம் அதுவன்று.யாழ்ப்பாணத்தில் வாகனத்தை ஓட்டுவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு பரீட்சகர் இல்லை. அதனால் அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் அவை கிடப்பில் போடப்பட்டுள்ளது, இத்தகையதோர் சூழ்நிலையில் லஞ்சத்திற்காக அல்லது, வருமானத்திற்காக தமிழ் மக்கள் என்ற காரணத்தை மறைமுக நோக்காகக்கொண்டு அவர்களிடம் இருந்து பணத்தை அறவிடுவதாக மட்டும் இருந்துவிடக் கூடாது.

இதேபோன்று யாழ்ப்பாண நகரத்தில் தற்போது வாகனங்களின் நெருசல் அதிகரித்துள்ளது. ஏ-9 தரைவழிப் பாதையின் திறப்பும் பொருள் விற்பனைகளின் அதிகரிப்பும் நகர வீதிகளில் வாகனங்களில் செல்லமுடியாத நிலையைத் தோற்றுவித்து விபத்துக்குக் காரணமாக உள்ளது.


இத்தகைய ஓர் நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்கு யாழ் நகரமையத்திற்கான பாதைகளைத் திறந்து விடுவது அவசியமாகும்.

குறிப்பாக வெலிங்டன் சந்தியிலிருந்து ஞானம்ஸ் ஹோட்டல் பகுதியால் செல்லும் மணிக்கூட்டு வீதி, ஆரியகுளம் சந்தியிலிருந்து வேம்படிச் சந்தி வரை செல்லும். பருத்தித்துறை வீதி,மின்சார நிலைய வீதியையும்,பருத்தித்துறை வீதியையும் இணைக்கும்விக்டோரியா வீதி போன்றவற்றை படையினர் திறந்து விடுவதன் மூலம் விபத்தினை தடுக்க முடியும்.

# சரியைத் தொண்டின் அருமைதனைப் போற்றி

# வாழ்ந்து காட்டிய வாகீசரும், வாதவூரரும்

## வெள்ளி நற்சிந்தனை



**வா**தவூரர்- மாணிக்கவாசகர்- வாகீசர் -திருநாவுக்கரசு நாயனார். மாணிக்கவாசகர் திருவாதவூரில் அவதரித்தார். திருநாவுக்கரசுநாயனார் திருவாமூரில் திருவவதாரஞ் செய்தவர். மணிவாசகருக்குப் பிள்ளைத் திருநாமம் திருவாதவூரர். திருநாவுக்கரசு நாயனாருக்குப் பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார். 'நாவுக்கரசு' என்னும் நன்னாமத்தைச் சிவபெருமான் சூட்டினார். திருவாதவூரருக்குச் சிவபெருமான் ஞான குருவாகி வழங்கிய தீட்சாநாமம மாணிக்கவாசகர்.

### தண்டனை

அரிமர்த்தன பாண்டிய மன்னன் முதன் மந்திரியார் குதிரை வாங்கவில்லையே என்று 49 கோடி பொன்னைத் திரும்பப் பெற வேண்டித் தண்டனை தந்தான். கங்கா நாயகர் கங்கையை, வைகை நதியாகப் பெருகச் செய்து அடியவர் அல்லல அகற்றினார்.

மகேந்திர பல்லவ மன்னன் சமணத் துறவியான மருணீக்கியார் சைவ சமயத்தில் சார்ந்தமைக்காகத் தண்டனை வழங்கினான். நெருப்பினால், நீரினால் நஞ்சினால் பானையால் வந்த இடர்களை எல்லாம் நற்றவனுடைய நன்னாமத்தை நவின்று நன்னெறி பெற்றார் நாவரசர்.

இவ்வாறாகப்பலவகையிலும் ஒத்த கருத்துடைய சமய குரவர்கள் இருவரும் கருத்தொருமிக்சப் பாடிய திருவாசகத் தேவாரத் திருப்பாடல் ஒரொன்று படிக்க இன்பம் பயப்பது. ஆகமப் பொருள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சரியாபாதத்தைத் தன்னகத்தே கருப்பொருளாகக் கொண்டவையாக விளங்குவன அத்தேவார, திருவாசகத், திருப்பாடல்கள்.

### பாடுவித்தார்

சிவபெருமானே தம்மைப் பாடுவித்தார் என்பதை மணிவாசகர் பெருமான், 'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகன்' என்பது போல் திருநாவுக்கரசு நாயனாரும் 'பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள் பாமாலை பாடப் பயில்வித்தானை' என்று பாடுவார்.

தேவாரம், திருவாசகம் என்று திருமுறையில் திருப்பாடல்கள் வேறுபட்டிருந்தாலும் கருப்பொருள் பரம்பொருளிடத்தில் பணிபுரியும் சரியைத் தொண்டிற்குத் தக்கசான்று ஒன்றுநிலைபெறுமாறு 'என்று தொடங்கும். மற்றையது 'ஆடுகின்றிலை' என்று ஆரம்பமாகும்.

### உடன்பாடும் எதிர்மறையும்

திருமுறைகள்பாடல் இரண்டும் நெஞ்சு ஒன்றையே முன்னிலைப்படுத்தி மொழிவன, தேவாரம் உடன் பாடாக உபதேசிக்கும், திருவாசகம் எதிர்மறையாக உணர்த்தும்.

''நெஞ்சே! நித்தலும் திருக்கோவிலுக்குச் செல். அலகிடு, மெழுகிடு, பூமாலை புனை, ஏத்து, புகழ்ந்துபாடு. தலையாரக் கும்பிடு கூத்து ஆடு அலறு,கற்பகமேஎனக்கதறு'' என்பது தேவாரக் கருத்துச் சுருக்கம்.

திருவாசகப்பொழிப்புப் பின்வருமாறுபொலியும், நெஞ்சே கூத்தப் பிரானிடத்தில் ஆடுகின்றிலை அன்பிலை. பாடுகின்றிலை பணிகிலை. பதைக்கின்றிலை.வணங்குகின்றிலை.திருவடியைத் தலையில் சூட்டுகின்றிலை. மலர்களைச் சூடுகின்றிலை. தேடுகின்றிலை. தெருவுதோறும் அலறுகின்றிலை,

இவ்வாறு ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரானும் ஊழி மலி திருவாதவூரரும் ஆகமத்தின் அரும்பதங்களில் ஒன்றானசரியைத் தொண்டினை நம் நற்கதி கருத்திற்கொண்டு ஊரறிய உலகறிய உணர்த்தினர்.

### சரியைத் தொண்டு

இவ்வாறு எல்லாம் இறைவனிடத்தில் அலறு, கதறு, பதறு, ஆசையை உதறுஎன்று ஏன் அழுத்திச் சொன்னார்கள்?

இறைவனடி சேராதவர்களுக்குப் பிறவிப் பெருங்கடல் நீந்தல் அரிது என்ற மெய்யியலை உணர்ந்தவர்கள் ஆதலின் அவ்வாறு அழுத்தம் கொடுத்து நமக்கு மெய்ப்பொருளை ஊட்டினார்கள்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் சரியைத்தொண்டின் சாரத்தை நெஞ்சிற்கே அறிவுறுத்துகின்றார். பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் உணர்வரிய மெய்ஞ்ஞானத்தை உணர்ந்து உபதேசிக்கின்றார்.

''நாள்தோறும் தலை பூக்களைச் சுமக்கட்டும். செவி சிவபெருமானுடையபுகழைக் கேட்கட்டும். வாய் நந்நாமத்தை வாழ்த்தட்டும். இச்சிவபுண்ணியத்தால் சீவன்நற்கதி அடையும்.

ஆகமவழி நின்றுசரியை, கிரியை,யோகம்,ஞானம் என்னும் மார்க்கங்களில் ஒழுகுபவர்களே புறக் கரணங்களால் புரியும்சரியைத் தொண்டிற்கு அழுத்தம் கொடுத்து ஒழுகியும், ஒழுகும்படி ஓதினார்கள் என்றால்சரியைத் தொண்டின் அருமை தான் என்னே! அப்பணி சிரமேற்றாங்கி இப்புவி தன்னில் இப்பணி புரிந்தால் மெய்ப்பொருள் பெறலாம் என்பதைத் செப்பித் தானா தெரிய வேண்டும்..!

**சிவ. சண்முகவடிவேல்**

## தினசரி தியானம்

### ஓதுதல்

ஓதும் மயிர்க்கால் தொறும் அமு தூறிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்த
மாதி சொரூபங்கள் மூன்றகன்றப்பாலை
வேதம் ஓதுஞ் சொரூபிதன் மேன்மையே.

- திருமந்திரம்

இறைவா, உன் பெருமையைப் பற்றிப் பெரியோர் உள்ளத்தில் பொங்கியெழுந்த பாக்களை நாள்தோறும் நான் ஓதுவேனாக.

ஏதேனும் ஒரு மொழியை மொழிந்து கொண்டுவர வர வாக்குச் சுத்தமடைகிறது. ஓதுதலோ அதிலும் மேலானது. ஆப்தர்கள் அருளிச் செய்த பாடல்கள் பரபோதம் நிறைந்தவைகள். பொருள் விளங்கினாலும், விளங்காவிட்டாலும் ஆப்த மொழிகளைச் சிரத்தையுடன், பகர்வதே ஓதுதலாகும். அதனால் வாக்குத் தெளிவும், மனத் தெளிவும், அருள் நாட்டமும்சேர்ந்து அமைகின்றன. எனவே ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.

- ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# மிதிவெடி அபாய மத்தியில் மீளக்குடியமர்ந்த மக்கள்

(துன்னாலை)

தென்மராட்சியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இன்னமும் மிதிவெடி அபாயம் இருப்பதாக அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மிதிவெடிகள் முற்றாக அகற்றப்படாத நிலையில் பொதுமக்களை மீளக்குடியமர அனுமதித்துள்ளமையால் அவர்கள் மிதிவெடி தொடர்பான அச்சத்துடனேயே தமது வாழ்க்கையை நடத்த வேண்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-41

## அமைச்சர் ஆறு

யாழ்அரசஅதிபர் கே.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் திணைக்களத்தலைவர்கள், செயலக உயரதிகாரிகள் மற்றும்பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்

இம்மாநாட்டில் ஊர்காவற்றுறை பிரதேசசபைக்குட்பட்ட காரைநகர் பகுதியைச் சேர்ந்த 25குடும்பங்களுக்கு வீடமைப்பு திட்டத்துக்குரிய தலா ஐயாயிரம் மற்றும் பத்தாயிரம் ரூபாகாசோலைகளும் வழங்கப்பட்டன

தென்மராட்சிப் பகுதிக்கு விஜயம்செய்த அமைச்சர் அங்குமுக்கிய நகரங்களைச் சுற்றிப் பார்வையிட்டதுடன் சாவகச்சேரி பிரதேசசெயலகத்தில் இடம்பெற்றகலந்துரையாடலிலும் கலந்து கொண்டார்

அத்துடன் அங்குமீளக்குடியமர்ந்த 70குடும்பங்களுக்கு கூரைத்தகடுகளும் அமைச்சரால் வழங்கப்பட்டது

இதேவேளை இன்றுநல்லை ஆதினம், நல்லூர்கந்தசாமிஆலயம் மற்றும் நயினாதீவுக்கு செல்லும் அமைச்சர் இன்றுமாலையே கொழும்பு திருப்புவார்.

(இ-77-10)

## அரசு புலிகள்

இதனைவிட தமிழீழவிடுதலைப்புலிகளின் தடை நீக்கம்குறித்து நிலவும்பல்வேறுபட்ட கருத்துக்கள் அவர்கள மீதானதடை நீக்கத்தை மேலும் காலதாமதப்படுத்துகிறது இதனால் பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி யூன்மாதத்தில் இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் குறைவாகவே காணப்படுகிறது இதனால் பேச்சுவார்த்தையின் ஆரம்பம்யூலைமாத நடுப்பகுதிவரை செல்லலாம் என்றுதெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நடுநிலை ஏற்பாட்டாளராக செயற்பட்டுவரும் நோர்வே அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் பேசி இணக்கம் காணப்படாத விடையங்களில் தீர்வைக்காணும் என்று எதிர்பார்க்கப் படுகிறது

இருதரப்பினருடன் பேசிய பின்பே பேச்சுவார்த்தைக்கானபுதியதிகதி நிர்ணயிக்கப்படும்என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்

(வ)

## சமாதானப்

ஆலோசகர்அன்ரன் பாலசிங்கம்நோர்வேத்தூதுக்குழுவினரிடம் மேலும்தெரிவித்திருப்பதாவது

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வுஉடன்படிக்கை ஏற்பட்டு தொண்ணூறு நாட்களான பின்னும் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் அரசுபின்னடிக்கிறது இதனால் யூன்மாதம் ஆரம் ஆரமபிக்கப்படவுள்ள பேச்சுவார்த்தை மேலும் பிற்போடப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி இயல்புவாழ்க்கை ஏற்படுத்தப்பட்டாலேஒழிய புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல் செய்வது கஷ்டமானகாரியமாகும் இதனால் பேச்சுவார்த்தைமேலும் தாமதமாகுமென்றும் அவர்தெரிவித்துள்ளார். (ம)

# நினைவலைகள்

15ம் ஆண்டு



1ம் ஆண்டு



5ம் ஆண்டு



தெல்லிப்பழை, பன்னாலையைச் சேர்ந்த
அமரர்கள்

பொன்னம்பலம் நாகலிங்கம்
உதயம் :- 1919.07.06
மறைவு :- 1987.12.08

நாகலிங்கம் செல்லமுத்து
1922.06.07
2001.06.03

நாகலிங்கம் நாகேந்திரராசா
1946.03.08
1987.12.09

திதி: 2002.05.24

அன்பு நெஞ்சங்களே ! அணையா தீபங்களே !
ஆண்டொன்றா, பதினைந்தா கடந்தது?
நம்பிடவே முடியவில்லை நானிலமதில்
நீவிர் நிழல் போல் கலந்து விட்டீர் எம்மில்
வாழவைத்து வாழவழிகாட்டியபடி
வாழ்ந்துகொண்டிருக்கும் உங்கள்

இராச பவனம்
பன்னாலை
தெல்லிப்பழை

மக்கள். மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(C/ 4287)

# கண்ணீர் மலர்களின் காணிக்கை

தோற்றம்
18
.
07
.
1946



2002

கே.கே.எஸ் வீதி மருதனார்மடத்தில் வசிப்பவராகிய

## திருமதி மார்க்கண்டு இராசமலர்

அவர்களுக்கு எமது கண்ணீர் மலர்களை காணிக்கையாக்குகின்றோம்

செல்வராசா
குடும்பத்தினர்

## மயக்கமா.....? தயக்கமா.......? மனதிலே......குழப்பமா?

உங்கள் கட்டிடங்கள் சம்பந்தமான சகல பிரச்சினைகளையும் பொறுப்புணர்வுடன் செய்து தீர்ப்பதற்குக் காத்திருக்கிறோம்

- மீள் புனரமைப்புக்கான அதிகாரபூர்வ மதிப்பீடு சமர்ப்பித்தல்.
- சகலவித வசதிகளுடனும் தேவைகளுக்கு ஏற்ப மீள் அமைத்தல்.
- நிதிப் பாச்சலுக்கேற்ற மீள் புனரமைப்பினைத் திட்டமிடல்.
- பயன்தரும் முதலீட்டுத் திட்டங்களுக்கான ஆலோசனைகளையும், ஆவணங்களையும் வழங்குதல்.
- தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், சைவாலயங்கள், போன்றவற்றை விதிமுறைகளிற்கு ஏற்ப புனரமைப்பு செய்தல்.
- விசேஷ தரம்பெற்ற திருத்தவேலைகள் செய்தல்.

கண்ணைக் கவரும் விதத்தில் உரிய படங்களுடன் சாதாரண குடிமகனும் விளங்கிக் கொள்ளும் வகையில் சேவைகள் அளிக்கப்படும்.

உயர் தொழில் நுட்ப வசதிகளும் தளபாடங்களும் எம்மிடம் உண்டு.

## ரூலின்ஸ்(RUHLINS)

"விமலம்" 6, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் (5332)

## இலங்கை-வங்கியின் விசேட கரும பீடம்

"சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் வருடாந்த மகோற்சவ கால சப்பறம், தேர், தீர்த்தோற்சவ தினங்கள் சிறப்புற வாழ்த்துவதில் இலங்கை வங்கி பெருமிதம் அடைகிறது"

இத்தினங்களில் (மே 24, 25, 26-2002) இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் விசேட கருமபீடமொன்று ஆலயச் சுற்றாடலில் இயங்க விருப்பதை அம்பிகை அடியார்களுக்கும், வங்கி வாடிக்கையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

- சிறுவர் பொன் அரும்புகள் கணக்கு
- 18 + plus இளைஞர் சேமிப்புக் கணக்கு
- மகளிர் பொற்கணக்கு
- சேமிப்புச் சான்றிதழ்

மேற்படி கணக்குகள் ஆரம்பிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

"இலங்கை வங்கி உங்கள் தேவைகளை சந்திக்கும்"

(C/4290)

# கணனிமயமாகும் யாழ் இலங்கை வங்கி

வங்கிச் சேவைகளைக் கணனிமயப்படுத்தலின் ஆரம்ப கட்டமாக இலங்கை வங்கி இன்று முதல் யாழ் மேற்தரக் கிளையில் தன்னியக்கப் பணம் மீளப்பெறும் இயந்திரத்தை அங்குரார்ப்பணம் செய்துவைப்பதை மகிழ்ச்சியோடு சகலருக்கும் அறியத்தருகின்றது.

கீழ் வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் தன்னுடைய தன்னியக்க பணம் மீளப் பெறும் அட்டையையும் இரகசிய எண்ணையும் பயன்படுத்தி யாழ் மேற்தரக் கிளையில் இன்று முதல் ஒரு நாளில் 24 மணிநேரமும் நாளொன்றுக்கு 20,000 வரை தனது கணக்கில் இருந்து பணம் மீளப்பெற முடியும்.

இவ் இயந்திரம் வைபவரீதியாக எமது வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திருமதி துரைராஜாவினால் இன்று மு.ப 9.30 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.




அனுராதபுரம்
பதுளை
நகர அலுவலகம்
5ம் நகரம்
தலைமைக் காரியாலயம்
ஜா-எல
கண்டி
கேகாலை
குருநாகல் பசார்
மாத்தறை
நிட்டம்புவ
பாராளுமன்றம்
இரத்மலானை
திம்பிரிக்கஸ்யாய
வெள்ளவத்தை
மகியங்கன

அம்பலாங்கொட
பண்டாரவெல
தம்புல்ல
காலி பசார்
ஹோமகம
கடவத்தை
கண்டி 2ம் கிளை
கொள்ளுப்பிட்டி
ஏரிக்கரை
மத்துகம
நுகேகொட
புறக்கோட்டை
இரத்தினபுரி
யூனியன் பிளேஸ்
கம்பஹா
கீதுவ

அவிசாவெல
பியகம
தியத்தலாவ
காலி பிரதான
ஹொரானை
கதுறுவெல
கதிர்காமம்
குழியாபிட்டிய
மகரகம
மெற்றா பொலிரென்
நுவரேலியா
போலியாகொட
ரீ ஜெனர் வீதி
வவுனியா
கல்ஸ்ரெய்
திருகோணமலை

பம்பலப்பிட்டி
பொறளை
தெகிவளை
கம்பொல
இடம
களுத்தறை
கட்டுநாயக
குருநாகல்
மாத்தளை
நீர் கொழும்பு
பாணந்துறை
பேராதனை
ரெஜிகொம்தலைமை அலுவலகம்
வத்தளை
கிரியத்கொட
வெண்னப்புவ

மேற் குறிப்பிட்ட கிளைகளை விட பின்வரும் இடங்களிலும் இவ் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.
ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம். கட்டுநாயக விமான நிலையம் பேராதனை பல்கலைக்கழகம்
துறைமுக அதிகாரசபை உலக வர்த்தக மையம்

## இலங்கை வங்கி என்றும் உங்களுக்காக

## "இலங்கை வங்கி உங்கள் தேவைகளைச் சந்திக்கும்"

பிரதான முகாமையாளர்
யாழ் மேற்தரக்கிளை
பிரதேச முகாமையாளர்
யாழ் மாவட்டம்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.